Registered as a Newspaper in Srilanka

விலை ரூபா: !0.00

# வலம்புரி

Valampurii


பக்கங்கள்: எட்டு

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

சங்கு 07 வள்ளுவர் ஆண்டு 2037 வைகாசி 02 செவ்வாய்க்கிழமை (16.05.2006) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 148

# நேரடிப் பேச்சுக்குறித்து ஆராய அமெ.அதிகாரி கொழும்பு வருகை

## ஜனாதிபதியுடன் இன்று பேச்சு



(கொழும்பு)

வடக்கு கிழக்கில் தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்பட்டுள்ள வன்முறைச் சம்பவங்களை தடுக்கும் நோக்கிலும் அரசிற்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையிலான நேரடிப் பேச்சுக்களை உடனடியாக ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வதற்காகவும் அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் ராஜதந்திரியும் தெற்கு மற்றும் மத்திய கிழக்கு ஆசிய விவகாரங்களுக்கான பிரதிச் செயலர் டொனால்ட் ஹாம்ப் நேற்று கொழும்பு வந்தடைந்தார். (08 ஆம் பக்கம் பார்க்க)

## ஆயுதக்குழு தாக்கி அறுவர் படுகாயம்

### மீசாலையில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி மீசாலை கேணியடி வீதியில் உள்ள வீடொன்றினுள் நேற்று முன்தினம் இரவு புகுந்த ஆயுதக்குழுவினர் அங்கிருந்தவர்களை கடுமையாகத் தாக்கியதில் அந்தக்குடும்பத்தினர் அனைவரும் யாழ்.போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது; ஆழ்ந்த நித்திரையில் இருந்த போது வீட்டின் முன்கதவைத் தட்டி திறக்குமாறு கூறியுள்ளனர்.

எனினும் பயத்தின் காரணமாக கதவு திறக்காததையடுத்து வீட்டின் பின்புறத்தின் கதவை உடைத்துக்கொண்டு உட்புகுந்த ஆயுதக்குழுவினர் (08 ஆம் பக்கம் பார்க்க)

## புத்தூர் நிலாவரைப் பகுதியில் இரு வர்த்தகரை காணவில்லை

### கடையினுள் இரத்தக்கறை

(யாழ்ப்பாணம்)

புத்தூர் நிலாவரைப் பகுதியில் இரு வர்த்தகர்கள் காணாமல் போயுள்ளனர். உணவகம் மற்றும் பலசரக்கு விற்பனை நிலையம் நடாத்திவரும் இருவருமே காணாமல் போயுள்ளனர்.

அவர்களது வர்த்தக நிலையங்களினுள் இரத்தக்கறைகளும் மனித சதைத் துண்டங்களும் காணப்படுகின்றன.

இவர்கள் இருவரும் சுட்டுக்கொல்லப்பட்ட பின்னர் இழுத்துச்செல்லப்பட்டிருக்கலாம் என அப்பகுதி மக்கள் சந்தேகம் வெளியிட்டனர்.

நேற்று முன்தினம் இரவு 8.30 மணியளவில் சம்பவம் நடைபெற்ற இடத்தில் துப்பாக்கிச்சூட்டுச் சத்தங்கள் கேட்டதாகவும் அவ்வேளை இராணுவத்தினரின் நடமாட்டம் காணப்பட்டதாகவும் மக்கள் தெரிவித்தனர்.

இவர்கள் இருவரும் காணாமல் போனமை தொடர்பாக கேள்வியுற்ற அப்பகுதி மக்கள் அவர்களைத் தேடும் முயற்சியில் ஈடுபட்டனர். எனினும் அவர்களை கண்டு பிடிக்க முடியவில்லை.

இச் சம்பவத்தில் தியாகராசா கிருபாகரன் (வயது 27) ,ஜெயரட்ணம் ஜெயந்தன் (வயது 25)ஆகிய இருவருமே காணாமல் போனவர்களாவர். காணாமல் போன இருவரும் உறவினர்கள் என தெரிவிக்கப்பட்டது.

இச் சம்பவம் குறித்து மல்லாகம் மாவட்ட நீதிவான் சறோஜினி இளங்கோவன் இன்று சம்பவ இடத்திற்குச் சென்று பார்வையிடவுள்ளார். (ச-05)

## சமாதான பேச்சுக் குறித்து ஆராய அரச குழு நோர்வே செல்லும்?

(கொழும்பு)

வடக்கு கிழக்கில் அதிகரித்து வரும் மனிதப்படுகொலைகளையடுத்து நோர்வே அனுசரணையாளர்களுடன் சமாதானப்பேச்சுக்கள் குறித்து கலந்துரையாடுவதற்கு அரசு முயற்சி எடுத்துவருவதாக தெரியவருகிறது.

சமாதான முன்னெடுப்புக்கள் குறித்த முக்கிய முடிபுகளை எடுப்பதற்கு அரச உயர் மட்ட குழுவொன்று விரைவில் நோர்வே செல்லவுள்ளது.

அங்கு செல்லும் அரச குழுவினர் நோர்வேயின் உயர் மட்டக்குழுவினருடன் இலங்கையின் சமாதான முயற்சிகள் குறித்து பேசவுள்ளனர்.விடுதலைப்புலிகளை நேரடிப் பேச்சுக்கு அழைப்பதற்கு நோர்வே அரசு கடும் முயற்சி எடுக்கவேண்டும் எனவும் அவர்கள் கோரவுள்ளதாக கொழும்புத்தகவல்கள் தெரிவித்தன. (ச-05)

## யாழில் பரவலாக கிரனைட் தாக்குதல்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் நேற்று பரவலாக இராணுவத்தினர்மீது கிரனைட் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

இதனையடுத்து இராணுவத்தினர் துப்பாக்கித்தாக்குதலை மேற்கொண்டனர். எனினும் எவருக்கும் எவ்வித சேதமும் ஏற்படவில்லை. கல்வியங்காடு வைரவர் கோயிலுக்கு அண்மையில் கடமையில் இருந்த இராணுவத்தினர் மீது நேற்று மாலை 5.45 மணியளவில் கிரனைட் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதுடன் அவர்களின் மீது துப்பாக்கித் தாக்குதலும் மேற்கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து அப்பகுதியில் பரவலாக துப்பாக் கிச்சத்தங்கள் கேட்டவண்ணம் இருந்தன. இதேவேளை கொக்குவில் சந்தியில் உள்ள இராணுவக் காவலரண் மீது நேற்று மாலை 6.30 மணியளவில் கிரனைட் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. எனினும் எவருக்கும் எவ்வித (08 ஆம் பக்கம் பார்க்க)

# ஆயுதக்களைவின் மூலமே வன்முறைகளை நிறுத்தலாம்!

## புலித்தேவன் ரொய்ட்டருக்குப் பேட்டி


(கிளிநொச்சி)

தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள வன்முறைகளை முடிவிற்குக் கொண்டு வருவதற்கு துணைக்குழுக்களின் ஆயுதங்களைக்களைய வேண்டுமென விடுதலைப் புலிகளின் சமாதான செயலகப்பணிப்பாளர் புலித்தேவன் தெரிவித்துள்ளார்.

ரொய்டர் செய்தி நிறுவனத்திற்கு வழங்கிய தொலைபேசிச் செய்தியிலேயே அவர் இதனைக்கூறியுள்ளார். உக்கிரமற்ற ஒரு தணிவான போர்தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கிற தென்று அண்மையில் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவர் உல்ப் ஹென்றிக்சன் வெளியிட்ட கருத்து சரியானது எனக் கூறியுள்ள புலித்தேவன் அது தொடர்பில் எந்தச் சந்தேகமும் இல்லை எனக் குறிபிட்டுள்ளார்.

தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்துள்ள இந்த போரினை அரச படைகள் உடனடியாக நிறுத்தி நிலைமையை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரவேண்டும். வன்முறைகளை முடிவிற்கு கொண்டுவருவதற்கு ஆயுதக்குழுக்களின் ஆயுதங்களை களையவேண்டும் என்று புலித்தேவன் வலியுறுத்தியுள்ளார்.

விமானப்படை விமானங்கள் எமது மக்கள் மீது குண்டு வீசித்தாக்கி வருகிறது. ஆகவே எமது மக்களின் பிரச்சினை குறித்துப் பேசுவதற்கு இது தருணம் அல்ல என்று புலித்தேவன் குறிப்பிட்டுள்ளார். (ச-05)



# "விடுதலையை வென்றெடுக்க ஒன்றிணைவோம்" கடற்புலி அன்புவின் நினைவுக் கூட்டத்தில் அமிர்தாப்

எமது தேசத்தின் விடுதலையை வென்றெடுக்க வேண்டிய இறுதிச் சந்தர்ப்பத்தில் நாம் அனைவரும் ஒன்றிணைந்து போராடவேண்டும் என சாள்ஸ் அன்ரனி சிறப்புப்படையணியின் தளபதிகளில் ஒருவரான அமிர்தாப், கடற்புலி லெப்.கேணல் அன்புவின் இறுதி வணக்க நிகழ்வில் கலந்து கொண்டு நினைவுரையாற்றுகையில் தெரிவித்துள்ளார்.

கடந்த வியாழக்கிழமை வடமராட்சி கிழக்கு கடற்பரப்பில் தமிழீழ கடற்படையினர் வழமையான பயிற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருந்தவேளை இலங்கை கடற்படையினரின் தாக்குதலால் ஏற்பட்ட மோதலில் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட கடற்புலி லெப். கேணல் அன்புவின் (நாகேஸ்வராஜா அமுதசுமணா, கொடுக்கிளாய், வடமராட்சி) இறுதிவணக்க நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

இன்று இறுதிக்கட்ட யுத்திற்குள் நாம் சென்றுவிட்டோம் கடந்த 4 வருட சமாதானத்தின் மூலம் நாம் எதனையும் பெற்றுக்கொள்ளவில்லை. சமாதானம் என்றோ செத்துவிட்டது. எமது மக்கள் அன்று தொட்டு இன்றுவரை பல பேச்சு வார்த்தைகளைக் கண்டுள்ளனர். முன்னைய பேச்சுக்கள் போன்றுதான் இனிவருகின்ற பேச்சுக்களும் எமக்கு எதனையும் தரப் போவதில்லை. எமது தேசத்தின் விடுதலையை எமது பலத்தின் மூலம் தான் தீர்மானிக்க முடியும் என தளபதி அமிர்தாப் மேலும் குறிப்பிட்டார்.

வீர வணக்கக் கூட்டத்தைத் தொடர்ந்து அவரது திருவுருவப் படம்பொதுமக்கள், போராளிகளின் அணிவகுப்புடன் உடுத்துறை மாவீரர் துயிலும் இல்லத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு அங்கு நினைவுக்கல்திரைநீக்கம் செய்யப்பட்டது. இந்நிகழ்வில் தமிழீழ மகளிர் அரசியல்துறை பொறுப்பாளர் தமிழினி சாள்ஸ் அன்ரனி, சிறப்புப்படையணி தளபதி அமிர்தாப், கடற்புலிகளின் மகளிர் பொறுப்பாளர் பூரணி, கடற்புலிகளைச் சேர்ந்த காதர் உட்பட பெருமளவு பொதுமக்களும், போராளி களும் கலந்துகொண்டனர். (து)

# 3 இலட்சம் ரூபா கொள்ளை

தேயிலைக் கொழுந்து கொள்வனவு செய்வதற்காக வங்கியிலிருந்து 3 இலட்சம் ரூபாவை மோட்டார் சைக்கிளில் எடுத்துச் சென்ற தம்பதியினரை வெள்ளை வானொன்றில் வந்த ஆயுதக்குழுவினர் கடத்திச் சென்றுள்ளதாக ஊறுபொக்க பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இவர்களைதெய்யந்தறைஎன்ற இடத்திலுள்ள கறுவாக் காடொன்றுக்குள் கொண்டு சென்று பணம் முழுவதையும் கொள்ளையிட்ட பின்னர் கொள்ளையர்கள் அவர்களிடம் இரண்டாயிரம் ரூபா பணத்தைக் கொடுத்து துரத்திவிட்டதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். இதுசம்பந்தமாகஊறுபொக்க பொலிஸார் விசாரணை செய்கின்றனர். (து-9)

# வாகனப் பற்றாக்குறை

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபையிடம் போதியளவு கழிவகற்றும் வாகனம் இன்மையால் வட்டாரங்களில் சேரும் குப்பை கூளங்களை உடனுக்குடன் அகற்ற முடியாமல் இருப்பதாகத் தெரியவருகின்றது.

தற்போது நகர சபையிடம் கழிவகற்றுவதற்காக ஒரேயொரு உழவு இயந்திரம் மட்டுமே இருப்பதாக நகரசபையின் செயலாளர் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் தென்மராட்சி பிரதேச செயலரிடம் ஓர் உழவு இயந்திரம் பெற்றுத்தருமாறு கோரிக்கை விடுத்துள்ளார் எனத் தெரியவருகின்றது.

அத்துடன்நகர மத்தியில்உள்ள மலசலகூடத்தின் கழிவுகளை சாதாரண முறையில் அகற்றுவது கடினமாக இருப்பதால் நவீன கழிவு அகற்றும் இயந்திரம் ஒன்றினைப் பெற்றுத்தர ஆவன செய்யும்படியும் நகரசபையின் செயலாளர் தென்மராட்சி பிரதேச செயலரிடம் கோரிக்கை விடுத்துள்ளார். என்பது குறிப்பிடத்தக்கது. (து-9)

# கரணவாயில் கிளைமோர் வெடித்தது

கரணவாய் மூத்தவிநாயகர் கோவிலுக்கு சற்று தூரத்தில் உள்ள வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலகம் முன்னால் நேற்றுக்காலை 9.20 மணியளவில் கிளைமோர் குண்டு ஒன்று பாரிய சத்தத்துடன் வெடித்தது அந்த நேரத்தில் அவ்வீதியில் எந்தவித வாகனப் போக்குவரத்தும் அவ் வேளையில் இடம் பெறாததால் உயிர்ச்சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை. பிரதேசசெயலகத்தின் மதில் எல்லைச் சுவர்கள் சேதத்திற்குள்ளாகின. புதிதாக கட்டப்பட்ட மேற்படி செயலகத்திற்கு மேற்குப்புறமாக உள்ள வீடொன்றின் முன்னால் உள்ள பாரிய வாகை மரமொன்றிலேயே கிளைமோர் பொருத்தப்பட்டிருந்தது.

இதனையடுத்து பதற்றமடைந்த இராணுவத்தினர் துப்பாக்கிச் சூட்டினை மேற்கொண்டனர். அத்துடன் பெருமளவு இராணுவம் குவிக்கப்பட்டு தேடுதல் மேற்கொள்ளப்பட்டது. மேற்படி குண்டு வெடிப்புச்சத்தம் கேட்டதும் சற்று தூரத்திலுள்ள நெல்லியடி நகரில் உள்ள அனைத்துக்கடைகளும் பூட்டப்பட்டு மக்கள் அல்லோல கல்லோலப்பட்டு வீடுகளுக்கு ஓடினர்.

இதேவேளை மேற்படி கிளைமோர் வெடித்த இடத்தில் உள்ள வீடொன்றுக்குள் புகுந்த இராணுவம் வீட்டைச் சேதப்படுத்தியதுடன் சமையல் அறையினை தீவைத்து கொளுத்தியுள்ளனர். குண்டுவெடித்த நேரத்தில் பிரதான வீதியால் வந்த தச்சுவேலை செய்யும் கரணவாய்ப் பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவரை கைதுசெய்ததாக கைது செய்யப்பட்டவர்களின் உறவினர்கள் தெரிவிக்கின்றனர். (து-15, 101)

# வடக்கு-கிழக்கில் தேர்தல் நடைபெறுமா?

(கொழும்பு)

உள்ளூராட்சி சபைத் தேர்தல்களை வடக்கு-கிழக்கில் நடத்து வது குறித்து தேர்தல் திணைக்களத்தில் இன்று விவாதிக்கப்படவுள்ளது. வடக்கு கிழக்கில் தேர்தல் ஒத்திவைக்கப்படக்கூடும் என்ற செய்திகள் வெளியான நிலையில் இக் கூட்டம் கூட்டப்பட்டுள்ளது.

வடக்கு கிழக்கின் தெரிவத் தாட்சி அதிகாரிகள் இக் கூட்டத்துக்கு அழைக்கப்பட்டுள்ளதாக பிரதி தேர்தல் ஆணையாளர் பி.எம். சிறீவர்த்தன தெரிவித்தார். மட்டக்களப்பு மற்றும் அம்பாறையில் தேர்தல் நடந்த ஏதுவான சூழ்நிலை இருப்பதாக அம்மாவட்டங்களின் தேர்தல் ஆணையாளர்கள் டி.கிசானந்தலிங்கம் மற்றும் டி.எம்.எல்.டி. தென்னக்கோன் ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

இருப்பினும் இன்று நடைபெறவுள்ள கூட்டத்திலேயே இறுதி முடிவு மேற்கொள்ளப்படவுள்ளது. (து)

# முகாமைத்துவ உதவியாளர்களுக்கு ஆசிரிய நியமனம் வழங்க முடிவு

(கொழும்பு)

1999ஆம் ஆண்டு வடக்கு-கிழக்கு மாகாண கல்வியமைச்சின் கீழ் இயங்கும் திணைக்களங்களில் முகாமைத்துவ உதவியாளர்களாக நியமிக்கப்பட்ட பட்டதாரிகளுக்கு ஆசிரியர் நியமனம் வழங்கப்படவுள்ளதாக மாகாண கல்வியமைச்சின் செயலாளர் ஆர்.தியாகலிங்கம் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் முக்கிய பணிகளுக்காக ஆட்சேர்ப்புசெய்யப்பட்டு தற்போது வடக்கு-கிழக்கு பாடசாலைகள், வலயக் கல்வி அலுவலகங்கள் மற்றும் கோட்டக்கல்வி அலுவல்கள் என்பனவற்றில் முகாமைத்துவ உதவியாளர்களாககடமையாற்றும்பட்டதாரிகளே ஆசிரியர்களாக நியமிக்கப்படவுள்ளனர்.

இதற்கான அங்கீகாரத்தை அமைச்சரவை வழங்கியுள்ளதாகவும் மாகாண கல்வியமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார். குறிப்பிட்ட முகாமைத்துவ உதவியாளர்கள் ஆசிரியர் நியமனம் பெறுவதற்கான தமது விருப்பத்தினை மாகாண கல்வியமைச்சின் செயலாளருக்கு எழுத்து மூலம் அறிவிக்க வேண்டும்.

இது தொடர்பான விண்ணப்பப் படிவங்கள் வலயக் கல்வி அலுவலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இவ் விண்ணப்பங்களை பூர்த்திசெய்து வலயக்கல்விப் பணிப்பாளர் ஊடாக மாகாணகல்வியமைச்சுக்குஅனுப்பி வைக்க வேண்டும்.

இவ்வாறு நியமிக்கப்பட்ட பட்டதாரிகள் வடக்கு-கிழக்கு மாகாணத்தின் கஷ்ட பிரதேச பாடசாலைகளுக்கு நியமிக்கவுள்ளதாகவும் மாகாணகல்வியமைச்சின்செயலாளர் தெரிவித்துள்ளார். (து-9)

# இராசிபலன்

**16.05.2006**
**(வைகாசி 2, செவ்வாய்க்கிழமை)**
**திருதியை முற்பகல் 11.08 மணிவரை**
**மூலம் முன்னிரவு 9.42 மணிவரை**
**இராகுகாலம் 2.53-4.23மணிவரை**
**சுபநேரம் 10.53-11.53 மணிவரை**
**சங்கடகர சதுர்த்தி விரதம்**
**அமிர்த சித்தம்**

- **மேடம்** — புதிய திட்டமிடல், களஸ்திர நன்மை, எதிர்பாராத செலவு, சரீரப்பிரயாசை.
- **இடபம்** — வாகனபயம், வீண் தொல்லை, காரிய தடங்கல், உடல்நலக்குறைவு.
- **மிதுனம்** — குடும்பமகிழ்ச்சி, எடுத்த கருமங்கள்கைகூடும், நல்ல வரவேற்பு, பொருள் சேர்க்கை
- **கடகம்** — பகைவர் நேசம், சுபநிகழ்வு, இஷ்ட சித்தி, ஆரோக்கியம்.
- **சிங்கம்** — தாழ்ந்த சுபாவம், சிறு வியாதி, முயற்சி தாமதம், பணவிரயம்.
- **கன்னி** — வாக்குமேன்மை, கல்வியில் ஆர்வம், வாகன சுகம், முயற்சி தாமதம்.
- **துலாம்** — கூட்டு முயற்சி, நல்ல செய்தி, சகோதரர் உதவி, பொருள் சேர்க்கை.
- **விருச்சிகம்** — கோபப்படுதல், காரியதாமதம், போசன சுகக்குறைவு, பணவிரயம்.
- **தனுசு** — நண்பர்கள் உதவி, நல்லமுயற்சி, புதிய தகவல், திடீர்நன்மை.
- **மகரம்** — காரிய அலைச்சல், சுபசெலவு, வீண் பகை, மனச்சோர்வு.
- **கும்பம்** — பெரியோர் உதவி, நல்ல வருமானம், காரிய அனுகூலம், உடல்நலம்.
- **மீனம்** — தூரதேசச் செய்தி, உற்சாகம், நண்பர்கள் உதவி, காரிய நன்மை.

- வளவன்

# மாணவர் தேர்ச்சி அறிக்கை புத்தகங்களை வழங்க நடவடிக்கை

(கொழும்பு)

2005, 2007ஆம் கல்வியாண்டுகளின் க.பொ.த.உயர்தர வகுப்பில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு மாணவர் தேர்ச்சி அறிக்கை புத்தகங்களை வலயக் கல்வி காரியாலயங்கள் ஊடாக விநியோகிப்பதற்கு இலங்கை பரீட்சைத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன்படி உயர்தர வகுப்பில் கல்வி கற்கும் ஒவ்வொரு மாணவ மாணவிக்கும் இந்த தேர்ச்சி அறிக்கைப் புத்தகங்கள் வழங்கப்பட்டு வருகின்றது.

தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் அச்சிடப்பட் டுள்ள மாணவர் தேர்ச்சி அறிக்கைப் புத்தகத்தில் குறிப்பிட்ட மாணவர்களின் பாடசாலை மட்ட கணிப்பீட்டுப் புள்ளிகள் இணைப்பாடவிதான செயற்பாட்டு தகவல்கள் என்பன பதியப்பட வேண்டுமென பரீட்சை ஆணையாளர் நாயகம் க.பொ.த. உயர்தர வகுப்புக்கள் உள்ள சகல பாடசாலை அதிபர்களுக்கும் சுற்று நிருபம் ஒன்றின் மூலம் அறிவித்துள்ளார். (து-9)

# மாத இறுதியில் விண்ணப்ப படிவங்களை பெறலாம்

2007ஆம் ஆண்டுக்கான முதலாம் தரத்திற்கு மாணவர்களை சேர்த்துக்கொள்வதற்கான விண்ணப்பப்படிவங்களை இம்மாத இறுதிக்குள் பெறலாம் என கல்வியமைச்சு தெரிவித்துள்ளது.

பெற்றோர்கள் எதிர்வரும் முதலாம் திகதியிலிருந்து யூன் மாதம் 30ஆம் திகதிவரை விண்ணப்பப் படிவங்களை பாடசாலைகளுக்கு அனுப்பிவைக்கலாம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இம்முறை மாணவர்களை சேர்த்துக்கொள்ளும் போது புதிய நடைமுறைகள் கையாளப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (க-9)

# தரமுயர்ந்த அப்பியாசக் கொப்பிகள்

உயர்ந்த தரம் வாய்ந்த அப்பியாசக் கொப்பிகளை தயாரிப்பதற்கு மகாபொல புலமைப் பரிசில் நிதியம் ஆலோசனை மேற்கொண்டுள்ளது. நிதியத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் இது குறித்துக் கருத்துத் தெரிவிக்கையில்,

இந்த அப்பியாசக் கொப்பிகள் குறைந்த விலையில் மாணவர்களுக்கு விற்கப்படும் என்றார் அப்பியாச கொப்பிகளை மகாபொல புலமைப்பரிசில் நிதியம் துரிதமாக தயாரிப்பதில் வர்த்தக அமைச்சு உதவவுள்ளது. (து-9)

சுன்னாகம்
கதிரமலைச் சிவன் மஹோற்சவம்

3ஆம் நாள்
இன்று கைலாயக் காட்சி

பன்னாகம் புனையும் பரமரா வாரே
பொன்னால் பொலிவெய்தும் அன்னை ஐயனைச்
சுன்னாகம் தொழவல்லார் மன்னாய் மகிழ்வாரே
கதிர மலையார் அதிருங் கழலார்
சதுரர் என்னச் சாரா வினைதானே
பிறைசூட்டிப் பிஞ்ஞகன் பிரிவின்றிச் சுன்னாகத்
துறைவான் என்றுள்க உறையும் உயர்வாமே
சுன்னாகக் கதிரமலை சொர்ணாம்பிகைச் சுந்தரர்
பன்னாகம் புனையும் பரமரா வாரே-
-சிவ. சண்முகவடிவேல்

## 'கடலும் தமிழர் தாயகமே'

# வெற்றிலைக்கேணி ஒத்திகைபற்றி பாலகுமாரன்

தமிழீழத் தமிழர்களின் உயிர் மையமாக திகழும் 'கடலும் எமது தாயகமே' என்றகோட்பாட்டைஉறுதிப்படுத்தவே வெற்றிலைக் கேணியில் ஓர் ஒத்திகை நடைபெற்றது என்று தமிழீழ விடுதலைப் புலி



களின் மூத்த உறுப்பினர் க.வே. பாலகுமாரன் தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் உத்தி யோகபூர்வ வானொலியான புலிகளின் குரலின் அரசியல் அரங்கம் நிகழ்வில் கடந்த சனிக்கிழமை அவர் இது தொடர்பாக உயைாற்றினார். 'வெற்றிலைக் கேணி கடற்பரப்பில் கடற்புலிகளின் தாக் குதலில் சிக்கி இரு டோராப் படகுகள் மூழ்கடிப்பு' என்றபின்னணி யோடு உங்களுடன் பேசுகிறேன்

*புலிகள் அனுப்பும் செய்தி*

பெரும் கடற்சமர் ஒன்று நடந்து முடிந்துவிட்டது. இந்த சமரின் ஊடாக மிகப் பெரும் அரசியல் செய்திகளையும் இராணுவச் செய்திகளையும் இராஜதந்திர செய்திகளையும் புலிகள் அனுப்பிக் கொண்டே இருக்கின்றனர்.

4 ஆண்டுகால சமாதான காலத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளை எல்லா வழிகளிலும் முடக்க நினைத்த முயற்சிகளை புலிகள் முறியடித்துவிட்டனர்என்பது தான் இதனது மையமான செய்தி. இலங்கைத் தீவில் தமிழ் மக்கள் சுதந்திரமாக இயங்க முடியாவிட்டால் பயணம் செய்ய முடியாவிட்டால் யாருமே இயங்கமுடியாது; பயணம் செய்ய முடியாது என்ற இராணுவச் சம நிலையை புலிகள் மிகத் தீவிரமாக வெளிப்படுத்தியுள்ளனர்.

நீண்டகாலத்துக்குப்புலிகளைச் சீண்டி சமாதான விளையாட்டுக்களை விளையாடலாம்என்றுநினைத்திருந்தால் அவர்களது எண்ணங்கள் யாவும் மண்ணாகிப் போகும் என்பது இப்போது கண்கூடாக தெரிகிறது.புலிகளைஎப்போதும்குறைத்து மதிப்பிடக் கூடாது என்பதும் புலிகளை எப் போதும் சோதிக்கக் கூடாது என்பதும் வரலாற்றின் இயங்குபொருள். இதை சிங்களம் உணர்ந்து கொள்ளவும் திருந்துவதற்கும் மீண்டும் ஒரு வாய்ப்பைப் புலிகள் அளித்திருக்கிறார்கள்.

வெற்றிலைக்கேணி கடற்பரப்பில் நிச்சயமாக சிங்களம் பாரிய ஒரு இழப்பைச் சந்தித்து இருக்க முடியும். அப்படியும் இருந்தும்கூட எங்கள் பெருந்தலைவர் பெருந்தன்மையோடு சிங்களம் திருந்துவதற்கான ஒருவாய்ப்பைக்கொடுத்திருக்கிறார்.

*தூங்கும் புலியைச் சீண்டாதீர்கள்*

இந்த நிலையில் இலங்கைக் கடற்படை யினரை ஆத்திரமூட்டும் வகையில் கடலில் விடுதலைப்புலிகள் நடமாடுவது யுத்தநிறுத்த மீறலாகும். 'இலங்கையைச் சுற்றிய கடற் பிரதேசமானது அரசாங்கக் கட்டுப்பாட்டில் உள்ளதாகும் சர்வதேச சட்டவிதிகளின்படி போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவின் தலைவரால் இது ஏற்கப்பட்டுள்ளது. அரச சார்பற்றோ எவரும் கடல் மற்றும் வான் வழிகளைப் பயன்படுத்த முடியாது விடுதலைப் புலிகளுக்கு உரிமை இல்லை.'

என்று மிகத் தீர்க்கமாக ஏதோ ஒரு விசாரணையின் முடிவில் கூறுவது போல் எந்த விதமான பொறுமையுமின்றி ஆலோசனையுமின்றிகண்காணிப்புக்குழு அறிக்கையை வெளியிட்டுள்ளது. அமைதிப் பேச்சு என்பது போர்நிறுத்தம் மட்டுமா? என்ற கேள்வி தற்போது எழுந்துள்ளது.

போர்நிறுத்த ஒப்பந்தத்தில் உள்ளது தான் தமிழ் மக்களுக்கான ஒட்டுமொத்த தீர்வா? தமிழ் மக்களின் அனைத்துப்பிரச்சினைகளுக்கும் போர் நிறுத்தக் கடதாசியிலே தீர்வுகள் வைக்கப்பட்டுள்ளதா? என்ற கேள்விகளை எம்மக்கள் எழுப்ப வேண்டிய நிலைக்கு வந்துள்ளோம்.

போர்நிறுத்தம்என்பதுமுழுமையான தீர்வை நோக்கிய முதலாவது படி என்பதை கண்காணிப்புக்குழுவின் தலைவர் அறிந்திருக்க மாட்டாரா? போர் நிறுத்த கண்காணிப் புக்குழுவின் அறிக்கை தமிழ் மக்களினது வாழ்நிலைக்கு எதிராகச் சொல்லப்பட்ட அறிக்கையாகும் இப் போர் நிறுத்த உடன்பாடானது தமிழரது தாயகத்தில் கடலிலும் நிலத்திலும் புலிகள் பெற்றுள்ள பலத்தின் அடிப்படையில்தான் செய்யப்பட்டது.

தரையில்தங்களதுநிலைகளைப் புலிகள் வைத்திருப்பது போலவே கடலிலே வைத்திருப்பதை எவராலும் தடுக்க முடியாது. இது கண் கணிப்புக்குழுவின் கவனத்துக்கு வராமல் இருந்திருக்கலாம்.

*அன்று சொன்னது என்ன?*

போர் நிறுத்த உடன்பாட்டில் இது சொல்லப்படாமல் இருந்தாலும் கூட சமநிலைச் சமன்பாட்டில் இவை அடங்கும் என்பதைத் தான் போர் நிறுத்த கண்காணிப் புக்குழுவின் முன்னாள் தலைவர் 2003ஆம் ஆண்டு தெரிவித்திருந்தார். அவர் கூறியதை சிங்களம் அன்று ஏற்க மறுத்தது.

கடலிலேபுலிகளின்சமநிலையை ஏற்றுக்கொள்ளாவிட்டால் அது பாரிய மோதல்களுக்கு வழிவ குக்கும். பாரிய நாசத்தை விளைவிக்கும் என்று அவர் கூறியிருந்தார். அன்று அவர் அஞ்சியது போலவே கடலிலேபாரியசமர்ஒன்று வெடித்து மற்றொருபோருக்கானமுன்னோடி நிலையைத் தோற்றுவித்திருக்கிறது.

கண்டல் காடு 64விழுக்காடு எமக்குரியது. உவர்சதுப்பு நிலங்களில் 81விழுக்காடு எமக்குரியது. மணற்திட்டுக்களில் 60 விழுக்காடு எமக்குரியது. காடுகளில் 24விழுக்காடு எமக்குரியது. இந்த நிலையில் கடல் என்பது தமிழர் தாயகத்தின் மிக முக்கியமான உயிர்மையமாக இருக்கிறது. ஆகையால் தான் இதனை உறுதிப்படுத்த ஓர் ஒத்திகையை கடலிலே நடத்திக்காட்ட வேண்டிய நிலை ஏற்பட்டது.

*மீளாத் துயரில் மீனவர்கள்*

மிக நீண்டகாலமாக எமது மீனவப் பெருமக்கள் படுகின்ற துன்பங்கள் அளவற்றது 1983ஆம் ஆண் டுக்குப் பின்னால் பாதுகாப்பு வலயம் என்பதைக் கணக்கிட்டுப் பார்ப் போமேயானால் ஏறத்தாழ 4 ஆயிரம் மீனவக் குடும்பங்கள் முற்றாகத் தொழில் இழந்துவிட்டனர். 45க்கும் மேற்பட்ட மீன் பிடித் துறைமுகங்கள் இராணுவ ஆக்கிரமிப்பில் உள்ளன.

வலிகாமம் வடக்கில் சேந்தாங் குளத்தில் இருந்துதொண்டமானாறு வரையில் உள்ள அனைத்து மீன் பிடித் துறைமுகங்களும் முற்றாக செயலிழந்துவிட்டன. இதனால் மக்கள் மீன்பிடிக்க முடியாது நிலை உள்ளது. ஆதலால் இதை இராணுவ ரீதியாக மட்டுமே சிந்திக்க முடியாது. மனித நேயத்துடன் புலிகள் செயற்பட வேண்டிய அவசியம் இருக்கிறது. என்பதை உலகம் புரிந்து கொள்ள வேண்டும். ஆகையால் கடலிலே அரச சார்பற்ற எவரும் பயணிக்க முடி யாது என்கிற போது மக்கள் எந்த அரசைச் சார்ந்தவர்கள் என்ற கேள்வி எழுகிறது.

*அல்லவெனில் நாங்கள் என்ன அடிமைகளா?*

எங்கள் மக்கள் என்ன அநாதைகளா? பிறநாட்டவர்களா? அவர்கள் எங்கே வாழ்வது என்ற கேள்விக்கு கண்காணிப்புக்குழு பதில் சொல்ல முடியுமா? உலகத்தில் எரி பொருள் அருகி வரும் இந்தக் காலத்தில் புதிய வளங்கள் குறித்து உலகம் மிகவும் கவனமெடுக்கிறது. தமிழ் நாட்டில் காவிரி வடிநிலத் தின் தொடர்ச்சியாக எங்கள் பகுதிகளில் பெற்றோலிய படிவுகள் இருப்பது குறித்த ஆய்வுகள் நடைபெறக் கூடிய காலம் உருவாகியுள்ளது. ஆய்வுகள் தொடங்கப்பட்டு விட்டன.

வங்காள விரிகுடாவுக்கு கிழக்குக் கரையோரமாக காவிரி வடிநிலமானது பாக்கு நீரினையுடன் இணைந்ததாக நீள்கிறது. இதனது 63விழுக்காடு தமிழ்நாட்டில் இருந்தாலும் கூட 35விழுக்காடு பெற்றோலியப் படிவுகள் உள்ள பகுதியாக தமிழீழப் பகுதிகள் உள் ளன. இப்போது இந்த எண்ணெய் வள ஆய்வுக்காக உலகம் முழுவதும் ஆதரவைத் தேடி அலைகிறது சிங்களம். இதிலும் கூட இந்தியா, சீனா நோர்வே என்று போட்டிகள் நடைபெறுகின்றன.

ஐ.நா.வில் ஏற்றுக்கொள்ளப்பட்ட 200மைல் கடல் பொருளாதார வலயம் என்பது ஏறத்தாழ 320கிலோ மீற்றராகும். அந்தக் கடல்வலயம் கூட எங்கள் கட்டுப்பாட்டில்தான் இருக்க வேண்டும் என்பது எங்கள் நியதி. அதற்காகத் தான் எங்கள் விடுதலைப் போராட்டமே உருவானது.

*பொறுமைக்குக் கிடைத்த பரிசு*

அனைத்தையும் அடக்கிக் கொண்டு 4 ஆண்டுகாலம் சமாதான காலத்தை கடைப்பிடித்தமைக்கு எங்களுக்குக் கிடைத்த பரிசு கடலிலே நீங்கள் பயணம் செய்யக்கூடாது; பயணம் செய்யமுடியாது; உங்களுக்கு உரிமை இல்லை என்பது தான். ஆகையால் போர் நிறுத்தம் மிகப் பெரிய கேள்விக் குள்ளாகியிருக்கக் கூடியதை அண்மையில் தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் வெளியிட்ட அறிக்கைக் கூடாக பார்த்திருப்பீர்கள். 'தமிழீழவிடுதலைப் புலிகளின் போக்குவரத்துக்கள், சுதந்திரமான நடமாட்டங்கள் சாத்தியப்படும்வரை இலங்கை படைகளினது சுதந்திரமான நடமாட்டத்தையும் போக்குவரவுகளையும் அனுமதிக்கமுடியாது' என்று தமிழ்ச் செல்வன் தெளிவாகக் கூறியுள்ளார்.

மேலும் சிறிலங்காவின் கடற்கலங்களில் கண்காணிப்புக் குழுவினர் செல்வது போல புலிகளினது படைக் கலங்களிலும் கண் காணிப் புக் குழுவினர் பயணிக்க வேண்டும் என்ற தாக்கரீதியான வேண்டுகோளையும் அவர் விடுத்திருக்கிறார். 'கடல் எமது தாயகம்' என்ற கோட்பாடு முதன்மைப்படுத்தப்பட்டு தமிழ்த் தேசிய இனச்சிக்கல் இப்போது கடலில் மையம் கொண்டுள்ளது எனப்பாலகுமாரன் மேலும் தெரிவித்தார்.

# சூறாவளி தாக்கியதில் 32 பேர் மரணம்

(மனிலா)

மனிலா பிலிப்பைன்ஸ் நாட்டில் 'சான்சூ' என்ற சூறாவளி



தாக்கியதில் இறந்தவர்களின் எண்ணிக்கை 32ஆக உயர்ந்துள்ளது.

பிலிப்பைன்சில் லுசான் பகுதியின் தெற்கு பகுதியில் உள்ளது.

மாஸ்பாடி தீவு. இங்கு கடந்த வெள்ளிக்கிழமை அதிகாலை சான்சூ என்ற சுறாவளி தாக்கியதில் 42ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். மீனவர்கள் பலர் உயிரிழந்துள்ளனர். இவர்களில் பலரது உடல்கள் கரை ஒதுங்கியுள்ளன. படகு ஒன்று கவிழ்ந்துள்ளது.

அதில் இருந்து இறந்த மீனவர் உடல்கள் மீட்கப்பட்டுள்ளன. இறந்தவர்களின் எண் ணிக்கை

WORLD NEWS உலக தரிசனம்

32ஆக உயர்ந்துள்ளது. மேலும் எட்டுபேரை காண வில்லை என அந்நாட்டு தேசிய பேரிடர் ஒருங்கிணைப்பு கவுன்சில் தெரிவித்துள்ளது. (மு)

# பக்தாத்தில் அடுத்தடுத்து குண்டுவெடிப்பு ஏழுபேர் பரிதாப பலி; 13 பேர் படுகாயம்

(பக்தாத்)

ஈராக் தலைநகர் பக்தாத்தில்



அடுத்தடுத்து பல இடங்களில் குண்டுகள் வெடித்ததில் ஏழு பேர் கொல்லப்பட்டனர். மேலும் 13பேர் காயம் அடைந்தனர்.

பக்தாத்தில் உள்ள சர்வதேச விமான நிலையத்துக்கு செல்லும் வழியில் முதல் குண்டு வெடித்தது இதில் மூன்று டிரக்குகள் ஒரு கார் ஆகியவை தீயில் கருகின. அடுத்து பக்தாத்தின் வடக்கு பகுதியில் பெய்ரூட் ஸ்கொயர் பகுதியில் ஈராக் பொலிஸ் வாகனங்கள் செல்லும் வழியில் ஒரு குண்டு வெடித்தது.

இதில் நான்கு பேர் கொல்லப்பட்டனர் ஐந்து பேர் காயம் அடைந்தனர். தொடர்ந்து பக்தாத்தின் மத்திய பகுதியில் தயாரான் ஸ்கொயர் பகுதியில் ஒரு குண்டு வெடித்தது இதில் இரண்டு பேர் கொல்லப்பட்டனர். ஐந்து பேர் படுகாயமடைந்தனர்.

பக்தாத்தில் இருந்து 390கி.மீ தொலைவில் உள்ள மோசூல் நகரம் ஈராக்கின் மூன்றாவது பெரிய நகரம் இது. இங்கு தீவிரவாதிகளுக்கும் ஈராக் பாதுகாப்புப் படையினருக்கும் இடையே நடந்த மோதலில் ஒரு பொலிஸ்காரர் கொல்லப்பட்டார் மூன்று பேர் காயமடைந்தனர்.

ஈராக் பார்லிமெண்ட் கூட்டத் தொடர் விரைவில் துவங்க உள்ளது. இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் இது போன்ற தாக்குதல்களில் தீவிரவாதிகள் ஈடுபட்டு வருகின்றனர் என்று ஈராக் அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (மு)

# ஜப்பானில் நில நடுக்கம்

(டோக்கியோ)

ஜப்பானில் இன்று அதிகாலை நிலநடுக்கம் ஏற்பட்டது. ரிக்டர் அளவில் இது 4.5 புள்ளிகளாக பதிவானது. டோக்கியாவுக்கு தென் மேற்கே 280 மைல் தொலைவில் 6மைல் ஆழத்தில் இந்த நில நடுக்கம் ஏற்பட்டது.

இதில் வீடுகள் கட்டடங்கள் அதிர்ந்தன. சேதம் பற்றி இன் னும் தகவல்கள் வெளியாகவில்லை. சுனாமி அலைகள் ஏற்பட்டதா என்பது குறித்தும் இதுவரை தகவல் வெளியிடப்படவில்லை.

ஜப்பான் நில அடுக்கு நகரும் பகுதியின் மத்தியில் உள்ளது. இதனால் அங்கு அடிக்கடி நில நடுக்கம் ஏற்படுவது உண்டு. உலகில் பல்வேறு பகுதிகளில் ஏற்படும் நிலநடுக்கங்களில் 20 சதவீதம் ஜப்பானில் மட்டும் ஏற்படுகிறது. (மு)

## இன்று ஒரு தகவல்

### உண்மையைத் தேடி...

ஒருவருக்கு ஒரு ஆசை. என்ன ஆசை? கடவுளைப் பார்க்க வேண்டும் என்று ஆசை. அதற்கு என்ன செய்வதென்று யோசித்தார். என்னெனனவோ செய்து பார்த்தார். ஒன்றும் சாியாக வரவில்லை. கடவுளைப் பார்க்க முடியவில்லை. அந்த சமயம் பார்த்து ஒரு ஆன்மிகப் பெரியவர் அந்த ஊருக்கு வந்தார். இவர் உடனே அவரிடம் ஓடிப்போய் கேட்டார். “நான் இறைவனைப் பார்க்கவேண்டும்.அதற்கு என்ன செய்யலாம்? ஒரு வழி சொல்லுங்கள்” என்று கேடடாா. அதற்கு அவர் சொன்னார்.“ நீ தனிமையான ஒரு இடத்தில் இறைவனை நினைத்து தியானம் செய். கடவுள் காட்சி கொடுப்பார்” என்றார்.

உடனே இவர் ஒரு காட்டுக்குப் போனார்... கண்ணை மூடி உட்கார்ந்து தியானம் செய்ய ஆரம்பித்துவிட்டார். “ஏய... யார் நீ இங்கே என்ன செய்கிறாய்?” என்று ஒரு சத்தம் இவர் கண்ணைத் திறந்து பார்த்தார். பக்கத்தில் ஒரு வேடன் நின்றுகொண்டிருந்தான். அவன் மறுபடியும் கேட்டான் “இங்கே என்ன செய்கிறாய்?” என்று. “நான் இறைவனைத தேடித் தியானம் செய்து கொண்டிருக்கிறேன்” என்றார் இவர்.

அவன் சொன்னான் “இறைவனா? அது எப்படி இருக்கும்? சிங்கம் மாதிரி இருக்குமா? புலி மாதிரி இருக்குமா? கரடி மாதிரி இருக்குமா? எப்படி இருக்கும் சொல்? எனக்குத் தெரியாதது இந்தக் காட்டில் எதுவுமில்லை. நீ விபரத்தைச் சொல் அது எங்கே இருந்தாலும் பிடித்துக்கொண்டு வருகிறேன்” என்று. அவருக்கு இது சங்கடமாகிவிட்டது. “இவன விபரம் தெரியாத ஆளாக இருக்கிறான். நமது தியானத்திற்கும் இடைஞ்சலாக இருப்பான் போலிருக்கிறதே... இவனது தொந்தரவிலிருந்து நாம் எப்படி மீள்வது?” என்று யோசித்தார்.

மறுபடியும் அவன் திரும்பி அங்கே வரக்கூடாது. இதற்கு என்ன செய்யலாம் என்றும் யோசித்தார். உடனே அவனிடம சொனனார்“ இதோ பாரப்பா... இறைவன் எப்படி இருக்கும் என்று கேட்டாய் அல்லவா? அதன் தலை சிங்கம் மாதிரி இருக்கும். உடல் மனிதன் மாதிரி இருக்கும். அதாவது மனித உடலில் சிங்கத்தின் தலை எங்கிருந்தாலும் பார்த்துக் கொண்டு வா” என்றார். “சரி கொண்டு வருகிறேன்” என்று கூறி அவன் புறப்பட்டான். காலையில் புறபபட்டவன் காடு முழுவதும் தேடி அலைந்தான். தண்ணீர் கூட குடிக்கவில்லை. மா்லை ஆகிவிட்டது. மிகவும் களைத்துவிட்டான்.

நினைத்துப் பார்த்தான். “நான் இந்தக் காட்டுக்கு ராஜா! என்னாலேயே ஒரு மிருகத்தைக் கண்டுபிடிக்க முடியவில்லையே... இதற்குப் பின்பும் நான் உயிருடன் இருக்க வேண்டுமா?” என்று யோசித்தான். உடனே அங்கிருந்த ஒரு கொடியைப் பறித்தான். அதை ஒரு மரத்தில் தூக்குக் கயிறு மாதிரிக் கட்டினான். அதில் கொண்டுபோய் தலையை வட்டான் தற்கொலை செய்வதற்காக. அந்தநேரம் பார்த்து பக்கத்திலிருந்த ஒரு புதரில் லேசாக ஒரு சலசலப்பு. எனனவென்று திரும்பிப் பார்த்தால் அங்கே ஒரு உருவம் நின்றுகொண்டிருந்தது. அதற்கு மனித உடம்பு. சிங்கத்தின் தலை.

“அடடா. உன்னைத்தானே இவ்வளவு நேரமாகத் தேடிக் கொண்டிருக்கிறேன்”என்று இறங்கி ஓடிவந்தான். அதை அந்தக் கொடியால் சுற்றிக் கட்டி இழுத்துக்கொண்டு வநதான் அந்தப் பெரியவரிடம். “இதோ பார்...நீ சொன்ன மிருகம் கொண்டு வந்துவிட்டேன்” என்றான். இவர் ஒன்றும் புாியாமல் கண்ணைத் திறந்து பார்த்தார். அந்தரத்தில் அந்தக் கொடி ஏதோ ஒரு உருவத்தை சுற்றியிருப்பது தெரிந்தது. உடனே புரிந்துகொண்டார். வந்திருப்பது இறைவன் தான் என்று. அந்தத் திசையை நோக்கி வணங்கினார். “இறைவா! இங்கே நான் உன்னை நினைத்து தியானம் செய்து கொண்டிருக்கிறேன். என்னை விட்டுவிட்டு இந்த உயிரைக் கொல்லும் வேடனுக்குக் காட்சி கொடுத்தி ருக்கிறாயே இது நியாயமா?” என்றார்.

அப்போது அசாரியாக அந்தக் குரல் கேட்டது. இறைவன் சென்னார். “நீ என்னையே நினைத்தாலும் உனது முழு மனமும் என்னிடம் வரவில்லை. ஆனால் இந்த வேடன் காலை முதல் மாலைவரை என்னை மட்டுமே நினைத்துக் கொண்டிருந்தான். தண்ணீர் கூட குடிக்காமல் முழு மனதோடு என்னைத் தேடினான். இதுதான் உண்மையான தேடல். அதனால் தான் அவனுக்குக் காட்சி கொடுத்தேன்” என்றார்.

இந்தக் கதையிலிருந்து நாம் தெரிந்துகொள்ள வேண்டியது என்னவென்றால் எந்த ஒரு உண்மையைத் தேடினாலும் அப்படித் தேடுவது, உண்மையான தேடலாக இருக்க வேண்டும் என்பதுதான்.

ஒரு விழா கூட்டத்தில் ஒரு பெண்ணின் கழுத்தில் இருந்த சங்கிலி திருட்டுப் போய்விட்டது. அந்தக் கும்பலில்.. திருடனை எல்லோரும் தீவிரமாகத் தேடிக் கொண்டிருந்தார்கள். மும்முரமாகத் தேடிக் கொண்டிருந்த ஒருவர் சொன்னார் “எவ்வளவு தான் உண்மையாகத் தேடினாலும் கூட அந்தத் திருடன் கிடைக்கமாட்டான் என்று தான் எனக்குத் தோன்றுகிறது” என்றார்.

“எப்படிச் சொல்கிறீர்கள்?” என்று கேட்டார் பக்கத்தில் இருந்தவர். அவருடைய காதில் இவர் ரகசியமாய் சொன்னார். “இப்போது நாம் எல்லோரும் தேடிக்கொண்டிருப்பது என்னைத் தான்” என்றார்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## மீண்டுமொரு யுத்தத்திற்கு நாட்டை இட்டுச் செல்ல முடியாது

## அமைச்சர் —பௌசி தெரிவிப்பு

(கொழும்பு)

மீண்டுமொரு யுத்தத்திற்கு நாட்டை இட்டுச் செல்ல முடியாது என்று ரயில்வே மற்றும் போக்குவரத்து அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசி தெரிவித்துள்ளார்.

யுத்தம் நடைபெற்ற ஒவ்வொரு காலப்பகுதியிலும் நாட்டின் பொருளாதாரம் பாரியளவில் வீழ்ச்சியை நோக்கி சென்றதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வைப வம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

நாடு இன்று எதிர்நோக்கியிருக்கும் பிரச்சினையை சகலரும் அறிவார்கள் என்று குறிப்பிட்ட அமைச்சர் மீண்டுமொரு யுத்தத்திற்கு செல்ல முடியாது என்பதனை ஆணித்தரமாக தெரிவித்துள்ளார்.

அச்சம் காரணமாக இதனை கூறவில்லை என்று தெரிவித்த அமைச்சர் யுத்தத்தை யாராலும் வெல்ல முடியாது என்றுழ் குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்து யுத்தம் இடம்பெறுமேயானால் நாடு அழிவதுடன் பொருளாதாரமும் வீழ்ச்சியடையும் என்றும், அந்நிய செலாவணி வருமானம் அற்றுப் போகும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

இவற்றை விட வாழ்க்கைச் செலவும் அதிகரிக்கும் என்று சுட்டிக்காட்டிய அவர், பேச்சுவார்த்தை மூலம் சமாதானத்தை அடைந்து இந்த நெருக்கடிகளிலிருந்து மீள முடியுமென்று அமைச்சர் பௌசி மேலும் தெரி வித்துள்ளார். (து-9)

## முகத்துவாரத்தில் இருவர் கைது

முகத்துவார பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட மட்டக்குழி பகுதியில் நேற்று அதிகாலை நடத்தப்பட்ட சுற்றிவளைப்பு தேடுதலின் போது இருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன் வீடொன்றிலிருந்து உள்ளூர் தயாரிப்பான துப்பாக்கி ஒன்றும் கைப்பற்றப்பட்டதாக முகத்துவார பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

நேற்று அதிகாலை 5 மணியளவிலிருந்து 4 மணி நேரம் இந்தத்தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டதாகவும் இதற்கு இராணுவத்தினரின் ஒத்துழைப்பு பெறப்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார். மட்டக்குழி பகுதியில் உள்ள வீடுகள் பல சோதனையிடப்பட்டதாகவும் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட இருவர் தொடர்ந்தும் விசாரணைக்குட்படுத்தப்பட்டு வருவதாகவும் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார். (து-9)

## மட்டுப்படுத்தப்பட்ட கொழும்பு-யாழ்ப்பாண பாரவூர்திச் சேவை

(கொழும்பு)

யாழ்ப்பாணம், கொழும்பு ஏ-9 வீதியிலுள்ள ஓமந்தை இராணுவ சோதனைச் சாவடி ஊடாக வட பகுதிக்கு உணவு, எரிபொருள் மற்றும் கட்டடப்பொருட்கள் உட்பட பல்வேறு பொருட்களை ஏற்றிச் செல்லும் தனியார் பாரவூர்திகளின் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கொழும்பின் இராணுவத் தலைமையகம் அமைந்துள்ள அதியுயர் பாதுகாப்புப் பகுதியில் இராணுவத் தளபதியை இலக்கு வைத்துக் கடந்த மாதம் நடத்தப்பட்ட தற்கொலைக் குண்டுத்தாக்குதல் சம்பவத்தை அடுத்தே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பாரவூர்தி உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த நடவடிக்கை காரணமாக வட பகுதிக்கு பொருட்களை ஏற்றிச்செல்லும் தனியார் பாரவூர்திகள் இப்போது தமது பயணத்தை ஒரே நாளில் மேற்கொள்ள முடியாதிருப்பதாகவும் ஓமந்தை சோதனைச் சாவடிக்கு செல்வதற்கு முன்னர் ஏ-9வீதியில் 15 கிலோமீற்றர் தொலைவிலுள்ள தாண்டிக்குளம் வீதித்தடை முகாமில் நாட்கணக்கில் காத்திருக்க வேண்டியுள்ளதாகவும் பாரவூர்திச் சாரதிகள் தெரிவித்துள்ளனர்.

தற்போதைய நாட்டின் பாதுகாப்புச் சூழல் காரணமாக படையினர் தமது சோதனை நடவடிக்கைகளை இறுக்கமாக்கியிருப்பதைத் தவிர வடபகுதிக்கு செல்லும் பாரவூர்திகளின் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்பட வில்லை என்று பாதுகாப்புத்துறை அதிகாரிகள் தம்மிடம் தெரிவித்ததாகவும் பாதுகாப்பு சோதனை அதிகரிக்கப்பட்டிருப்பதினால் விரைவாக பாரவூர்திகளை சோதனையிட்டு அனுப்புவதற்கு இடவசதியும் பொருட்களை ஏற்றி இறக்குவதற்கான ஆளணி வசதிகளும் குறைவாக இருப்பதாகவும் இராணுவ அதிகாரிகள் தம்மிடம் தெரிவித்ததாக வவுனியா அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார். (து-9)

## திருமலையில் இரு இளைஞர்கள் சுட்டுக் கொலை

திருகோணமலையில் இனந்தெரியாத குழுவினரால் இரு தமிழ் இளைஞர்கள் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். பெருவெளியைச் சேர்ந்த மதுரன், புளியடிச் சோலையைச் சேர்ந்த ஜெயந்திரன் ஆகிய இரு இளைஞர்களுமே சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் காலை 9.45 மணிக்கு திருகோணமலை, மட்டக்களப்பு வீதியில் மூதூர் பெரிய பாலம் என்னும் இடத்தில் இடம்பெற்றது.

பொருட்களை ஏற்றிக்கொண்டு செல்வதற்காக இரு சக்கர உழவு இயந்திரத்தில் வந்து கொண்டிருக்கும் போதே இவர்கள் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர். (து)

## விய வருடப் பெருவிழா

அருள்மிகு வில்லூன்றி வீரகத்தி விநாயகர் திருக்கோவில் விய வருடப் பெருவிழா நாளை புதன்கிழமை முற்பகல் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி இம் மாதம் 30ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை வைரவர் விசேட பூஜையுடன் முடிவடையும்.

25.05.2006வியாழக்கிழமை பஞ்சமுக விநாயகர் திருத்தேர்த்திருவிழாவும், வெள்ளிக்கிழமை காலை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.

27ஆம் திகதி திருத்தண்டிகைத் திருவிழாவன்று சுவாமி சீனிவாசகம் வீதி, சிவன் பண்ணை வீதி, ஆஸ்பத்திரி வீதி வழியாகப் பவனி வருவார். (து)

## ஜப்பான் செல்லும் இலங்கை அமைச்சர்கள்

(கொழும்பு)

இலங்கை வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர எதிர்வரும் வியாழக்கிழமை ஜப்பான் செல்கிறார்.

சிறிலங்கா அமைச்சரும் ஜெனீவாப் பேச்சுக்குழு உறுப்பினருமான ரோகித போகல்லாகம எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை ஜப்பான் செல்கிறார்.

ஜப்பானில் இலங்கைக்கு உதவி வழங்கும் இணைத் தலைமை நாடுகளின் கூட்டம் இம்மாத இறுதியில் நடைபெற உள்ள நிலையில் இலங்கை அமைச்சர்கள் ஜப்பானை முற்றுகையிட்டு வருகின்றனர். (து)

## ஜனாதிபதிக்கு மனித உரிமைகள் அமைப்பு வேண்டுகோள்

(கொழும்பு)

மனித உரிமை மீறல் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை மனித உரிமை மற்றும் அபிவிருத்திக்கான ஆசிய மையம் வலியுறுத்தியுள்ளது. இது தொடர்பாக மேற்படி மையம் ஜனாதிபதிக்கு அனுப் பியுள்ள கடிதத்தில்,

இலங்கை அமைதி முயற்சிகளுடன் தொடர்புடைய மனித உரிமை மீறல்களுக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் அமைச்சரவை முகம் கொடுக்கவேண்டும்.

மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கான உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளாத இலங்கை அரசாங்கம் ஐ.நா.மனித உரிமைகள் ஆணைக்குழு உறுப்பினர் பதவியை ஒப்புக்கொண்டிருப்பது கவலைக்குரியது.

இலங்கையின் மனித உரிமைகளைப் பாதுகாக்க ஏற்கனவே பல்வேறு மனித உரிமைகள் அமைப்பினர் அளித்திருந்த பரிந்துரைகளை தொகுத்து தங்களுக்கு அனுப்புகிறோம் என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (து)

## ராஸிக்குழ முகாமில் கைக்குண்டு வெடிப்பு

(திருகோணமலை)

திருகோணமலை சீனன்குடா புனித அந்தோனியார் தேவாலயத்தில் தஞ்சம் அடைந்துள்ள இடம்பெயர்ந்த மக்களை உடனடியாக அங்கிருந்து வெளியேறுமாறு பொலிஸாரின் உதவியுடன் பௌத்தர்கள் சிலர் அச்சுறுத்தியுள்ளனர்.

நேற்றுமுன் தினம் காலை 5.00மணியளவில் சீனன்குடா பன்சாலைக்கு பின்புறமாக வெடிக்க வைக்கப்பட்ட கைக்குண்டு அந்தோனியார் தேவாலயத்தில் தங்கியுள்ள அகதிகளினால் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக சந்தேகிக்கப்படுகிறது.


பாரம்பரிய தமிழ் கிராமமான சீனன்குடாவில் இருந்து காலம் காலம் ஏற்பட்ட வன்முறைகளை தொடர்ந்து தமிழ் மக்கள் வெளியேற்றப்பட்டு வருகின்றனர். எஞ்சி உள்ள தமிழ் மக்களையும் வெளியேற்றுவதற்கு பௌத்தர்கள் நடவடிக்கை எடுத்துவருகின்றனர் எனக் கூறப்படுகிறது. மட்டக்களப்பு ராஸிக்குழ முகாமில் கைக் குண்டு வெடித்ததில் ஒரு இராணுவ சிப்பாய் படுகாய மடைந்த தாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை மட்டக்களப்பு நகரில் படையினரின் சோதனை கெடுபிடிகள் அதிகரித்துசெல்வதன் காரணமாக மக்கள் நகருக்கு வருவது குறைவடைந்து செல்வதாகவும் இதன் காரணமாக வர்த்தக நடவடிக்கைகளில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாகவும் வர்த்தகர்கள் கவலை தெரிவிக் கின்றனர். (து)

# நெல்சன் மண்டேலா

**த. பாண்டியன்**

## மீள்பார்வை



### மீண்டும் தாய் மண்ணில் 42

தன் கால்சட்டைப் பைக்குள் குண்டோடு இருந்த ரிவால்வரையும், தனது டயரியையும், காரில் இருந்த ஒரு தொங்கு பைக்குள் அவசரமாகத் திணித்துவிட்டார். காவல்துறை சோதிக்காமல் விட்டு விட்டது. காவல்நிலையத்தில் இருந்த அதிகாரியிடமும் தான் டேவிட் மோட்சமாயி என்றேதான் மண்டேலா சொன்னார். அவர் சிரித்துக் கொண்டே "மண்டேலா உம்மை எமக்கு நன்கு தெரியும். எதற்காக இந்த நாடகம், விட்டுவிடு" என்றார். ஏனெனில் ராஜதுரோக வழக்கை நடத்துவதில் பங்கேற்றவர் அவர்.

செசிலும், மண்டேலாவும் வெவ்வேறு அறைகளில் அடைக்கப் பட்டனர். டர்பனிலிருந்து ஜோகன்ஸ்பர்க்கிற்குத் திரும்பப் போவதை யாரோ தகவல் கொடுத்திருக்கக் கூடும். அதற்காக நாட்கணக்கில் காட்டுப் புதரில் இவர்கள் பதுங்கியிருந்திருக்க வேண்டும். காட்டிக் கொடுத்தது யார்? என்ற குழப்பம் மண்டேலாவை வாட்டியது. சீ.சீ... நம்மவரையே சந்தேகிக்கக் கூடாது. எப்படியோ பொலிஸ் பிடித்து விட்டது. இனி அடுத்து என்ன செய்வது என யோசிக்கலாம் எனக் கருதினார். மறு நாள் பத்திரிகைகளில், பெரும் தலைப்புகளில், மாய மனிதன் பிடிபட்டான் எனச் செய்தி வெளியிட்டிருந்தன. இது மாதிரிச் செய்திகள் அடிஸ்அபாவில் இருந்தபோதும் வெளியானது உண்டு. அப்பொழுது வின்னியை நாள்தோறும் பொலிஸார் தொந்தரவு பண்ணிக் கொண்டே இருந்தனர்.

இப்பொழுது காவல்துறையின் பிடியில் மண்டேலா, தனது கவனக்குறைவும் இதற்கு முக்கிய காரணம் என நினைத்து நொந்தார். மறுநாள் மாஜிஸ்திரேட் முன்னர் நிறுத்தப்பட்டு, ரிமாண்டு செய்யப்பட்டார். விலங்கு போடாமல், ஒரு செடான் காரில் மண்டேலாவை உட்கார வைத்து அழைத்துச் சென்றனர். இடையில் நிறுத்தி சிறிது தூரம் காலார நடக்க அனுமதித்தனர். நட்போடு, நம்பிக்கையோடு, அதிகாரிகள் நடந்து கொள்ளும் போது, தப்பியோட மண்டேலா முயற்சிப்பது தவறு எனக் கருதினார்.

ஆனால், ஜோகன்ஸ்பர்க்கிற்குள் நுழைந்தவுடன், நிலைமை முற்றிலும் மாறியது. மண்டேலாவுக்கு விலங்கு பூட்டப்பட்டது. எங்கும் பலத்த காவல் போடப்பட்டிருந்தது. தான் பலமுறை எந்த நீதிபதி முன் நின்று வாதாடினாரோ அதே நீதிபதி முன்னால் குற்றவாளியாக நின்றார். மண்டேலாவுடன் பழகிய வழக்குரைஞர்கள், மரியாதையுடன் ஆனால் பேசாமல் வரவேற்றனர். நீதிபதியிடம் தன் வழக்கை, தானே நடத்தப்போவதாகவும், ஜோஸ்லோவோ ஒத்துழைப்புக்காக வருவார் என்றும் மண்டேலா கூறிவிட்டார். இவ்வாறு செய்தால் தான் அரசின் மீதே எதிர்க்குற்றம் சாட்டி அரசியல் கொள்கைகளை விளக்கிட வழிகிடைக்கும் என நினைத்தார்.

மண்டேலா மீது, நாட்டை விட்டு அனுமதியின்றி வெளியே சென்றது வேலை நிறுத்தத்திற்கு அறைகூவல் விட்டது தூண்டியது என்ற குற்றச்சாட்டுப் பட்டியலைத் தான் வாசித்தனர். உம்காண்டோ-வி. சிஸ்வே என்ற ரசகியப் படையை அமைத்ததற்கான தடயங்கள் கிடைக்காததால், அது சேர்க்கப்படவில்லை. ஆனால், வேலை நிறுத்தம், எல்லை கடந்ததற்காகவே தென்னாபிரிக்கச் சட்டப்படி பத்தாண்டு கடுங்காவல் தண்டனை விதிக்க வழி இருந்தது. நீதிமன்றத்தை விட்டு வெளியே செல்ல இறங்கிய போதுதான், பார்வையாளர்கள் பகுதியில் வின்னி அமர்ந்து இருப்பது தெரிந்தது. இதில் மண்டேலா பெறப்போகிற தண்டனை-அதன்பின் இரு குழந்தைகளை தனித்து நின்று வளர்க்க வேண்டிய பொறுப்பு-காவல்துறையின் கெடுபிடி என வின்னி சிந்தித்தவாறு இருந்திருக்கக் கூடும்.

மறுநாள் பத்திரிகைகளில், காவல்துறையினர் இரண்டாண்டு வேட்டை வெற்றி என்றும், நெல்சன் மண்டேலா கைது என்றும் செய்திகள் வெளியிடப்பட்டன. சில நாட்களுக்குப் பிறகு வின்னிக்கு மண்டேலாவைச் சந்திக்க அனுமதி கிடைத்தது. இந்தத் தடவை வரும்போது வின்னி, நல்ல ஆடையுடுத்தி வந்தார். சிரித்தவாறு வந்தார். கையில் புதிதாகத் தைக்கப்பட்ட இரண்டு பைஜாமாக்கள், இரண்டு பட்டாடைகளையும் கொண்டு வந்திருந்தாள். அது விழாவிற்குப் போட வேண்டிய ஆடை. சிறைக்குப் பொருந்துமா? தன் அன்பைக் காட்ட வின்னி அவ்வாறு செய்துவிட்டார்.

இருவரும் தனித்துப் பேச சிறை அதிகாரி அனுமதித்தார். திரும்பும் போது நுழைவாயில் வரை வின்னியை விட்டுவர, உடன் செல்ல மண்டேலாவை அனுமதித்தார். வின்னி, தன்னந்தனியாக எந்தத் துணையுமின்றி, சிறைவாசலை விட்டு திரும்பிப் பார்க்காமல் நடந்து போய்க்கொண்டிருப்பதை மண்டேலா பார்த்தார்.

### சிறைக் கொட்டடியில்

ஜோகன்ஸ்பர்க் சிறைக் கோட்டைக்குள் மண்டேலா அடைக்கப்பட்டார். சிறையதிகாரியாக மின்னார் என்பவர் இருந்தார். இருந்த அதிகாரிகளுள் இவர் சற்று நிதானமான, கருணையுள்ள மனிதராகக் கருதப்பட்டவர். இவர் மண்டேலாவை, சிறை மருத்துவமனைக்குப் போய்விட யோசனை கூறினார். ஏனெனில், அங்கு படுக்கை, மேஜை, நாற்காலி கிடைக்கும். "வழக்கை நீ தயாரிக்க நல்ல இடம்" என அவர் யோசனை கூறினார். இதை மற்ற அதிகாரிகள் உடனே ஏற்றதற்கு ஒரு காரணம் இருந்தது. மருத்துவமனையைச் சுற்றி மிக உயரமாக எழுப்பப்பட்ட கோட்டைச் சுவர் இருந்தது. மருத்துவமனைக்குள் வர இரு பெரும் இரும்புக் கதவுகளைத் திறந்த பின்னர் தான் யாரும் நுழைய முடியும்.

பத்திரிகைகள், மண்டேலாவை அவரது ஆதரவாளர்கள் விடுவித்துக் கொண்டு போகத் திட்டம் போட்டிருப்பதாக திரித்த கதை, காவலைக் கெட்டிப்படுத்தியது. பத்திரிகைகள், நிருபர் ஜி. ஆர்.நாய்டு தான் தகவல் தந்திருக்கக்கூடும் எனச் சந்தேக விதையை விதைத்தன. மண்டேலா அதை நம்பவில்லை. கம்யூனிஸ்டுகளும், இந்தியர்களும், ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் எடுத்துள்ள சுயேச்சைக் கொள்கையை எதிர்த்தும், கண்டிக்கும் வகையிலும் காட்டிக் கொடுத்திருக்கக் கூடும் என்ற பழியையும் சுமத்தினர். மண்டேலா இதை ஏற்க மறுத்து, "இது நம் விரலால் த நம் கண்ணைக் குத்துகிற காரியம். எனவே இதைக் கைவிட்டு, அடுத்த காரியத்தில் ஈடுபடுங்கள்" என்றார்.

டிரான்ஸ்வால், இந்திய இளைஞர் காங்கிரஸ் மாநாட்டைத் தொடக்கி வைக்க வின்னி அழைக்கப்பட்டிருந்தார். அங்கு பேசும்போது, "மண்டேலாவைக் காட்டிக் கொடுத்தது யார் எனத் தேடி நேரத்தை வீணடிக்க வேண்டாம். இது நமக்குள் சண்டையை மூட்டி விடச் செய்யப்படும் சதி" என்று பேசி, இந்த சர்ச்சைக்கு முடிவு கட்டினார்.

ஜோகன்ஸ்பர்க் சிறையில் இருந்த போது பலரும் வந்து பார்த்து சென்றனர். திடீரென பிரிட்டோரியா சிறைக்கு மாற்றப்பட்டார். போகும் போது இன்னொரு கிரிமினல் குற்றவாளியையும் பக்கத்தில் உட்கார வைத்துக்கொண்டு வந்ததோடு இருவரையும் ஒரே அறையில் பூட்டினர். எதிர்ப்புக்குப்பின் தனி அறைக்கு மாற்றினர். (தொடரும்)

---

க.பொ.த. (உ/த) பரீட்சை

## அடையாள அட்டை கிடைக்காததால் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்கள் கவலை

(கொழும்பு)

பணிப்புறக்கணிப்புக் காரணமாக அரச அலுவலகங்கள் இயங்காத காரணத்தால் எதிர்வரும் 23 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள க.பொ.த(உ/த)பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களில் பெரும்பாலானோர் தமது தேசிய அடையாள அட்டைகளைப் பெற்றுக் கொள்ள முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

தேசிய அடையாள அட்டைக்கு பாடசாலைகளூடாக விண்ணப்பித்தவர்களுக்கான அடையாள அட்டைகள் கொழும்பிலிருந்து ஏற்கனவே அனுப்பப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ள போதிலும், வட பகுதியில் தபால் நிலையங்கள் இயங்காத காரணத்தால் அவை விநியோகம் செய்யப்படவில்லையெனத் தெரிகிறது.

இந்தநிலையை யாழ்.கல்வி அதிகாரிகள் கவனத்துக்கெடுத்து உடனடியாக மாற்று ஏற்பாடு ஏதாவதை மேற்கொண்டு மாணவர்கள் உளரீதியான பாதிப்பின்றி பரீட்சைக்குத் தோற்றக் கூடிய ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டுமெனப் பாதிக்கப்பட்டுள்ள மாணவர்களின் பெற்றோர் தெரிவிக்கின்றனர். (து-133)

## உல்ப் ஹென்றிக்சனுடன் 57 உறுப்பினர்கள் சந்திப்பு

(கொழும்பு)

இலங்கை போர் நிறுத்த கண்காணிப்புக்குழுத் தலைவர் உல்ப் ஹென்றிக்சனுடன் கண்காணிப்புக் குழுவின் 57 உறுப்பினர்களும் கொழும்பில் இன்று பேசவுள்ளனரெனத்தெரிகிறது.

தமிழர் தாயக கடற்பிராந்திய கண்காணிப்புத் தொடர்பாக இக்கூட்டத்தில் விவாதிக்கப்படவுள்ளதாக கண்காணிப்புக்குழுவின் பேச்சாளர் பெளல்ப்ஜெர்க் தெரிவித்தார்.

உல்ப் ஹென்றிக்சனுடனான ஆலோசனைக் கூட்டத்துக்குப் பின்னர் கண்காணிப்புப்பணிகளில் புதிய உத்திகள் கடைப்பிடிக்கப்படும் என்றும் கடற்கண்காணிப்பு மீள மேற்கொள்ளப்படும் என்றும் அவர் கூறினார்.

கண்காணிப்புக் குழுவினரது எண்ணிக்கையை 75ஆக உயர்த்துவது குறித்து நோர்வே அனுசரணையாளர்களிடம் பரிந்துரைத்துள்ளோம் என்றும் கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் தெரிவித் தார். (து)

## அம்பாந்தோட்டையில் 13 பேர் கைது

அம்பாந்தோட்டையில் விடுதலைப்புலிகள் என்ற சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்ட 13 பேர் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப் படவுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்கள் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் உரிய அடையாள ஆவணங்களை வைத்திருக்கவில்லை என்றும் இலங்கை பொலிஸார் தெரிவித் துள்ளனர்.

மேலும் சிங்களம் தெரியாமையால் அவர்களிடம் அவர்களால் விசாரணைகளை நடத்த முடியவில்லை என்றும் கூறப்படுகிறது. கைது செய்யப்பட்டுள்ள 13 பேரும் நாளை நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்படவுள்ளனர். (து)

## இராஜதந்திரப்பணிகளில் அரசியல் ஆதரவாளர்கள் ஜனாதிபதி மஹிந்தவின் முடிவுக்குக் கடும் எதிர்ப்பு

(கொழும்பு)

வெளிநாடுகளில் இலங்கைக்கான இராஜதந்திரப் பணிகளில் தனது தேர்தல் வெற்றிக்காகப் பாடுபட்ட அரசியல் ஆதரவாளர்களை நியமிக்க ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முடிவு செய்திருப்பதால் இலங்கை அரசாங்கத்தில் கடும் அதிருப்தி ஏற்பட்டிருப்பதாக தெரிகிறது.

வெளிநாடுகளில் உள்ள இலங்கை தூதரகங்களின் உயர் பதவிகளுக்கு நியமிக்கப்பட வேண்டியவர்களின் பட்டியல் ஒன்றை வெளிவிவகார அமைச்சுக்கு மஹிந்த ராஜபக்ஷ அனுப்பியுள்ளார்.

அப்பட்டியலில் உயர்தர பரீட்சையில் கூட தேர்ச்சியடையாதவர்களும் இடம்பெற்றுள்ளமை குறித்து உயர் அதிகாரிகள் கடும் அதிருப்தியடைந்துள்ளனர். அப்படியான ஒருவர் லத்தீன் அமெரிக்க நாடுகளுக்கான முதன்மைச் செயலாளர் என்ற பொறுப்பில் நியமிக்கப்படவுள்ளார்.

மஹிந்தவின் தேர்தல் வெற்றிக்காகப் பாடுபட்டவர்கள் என்ற ஒரே காரணத்துக்காக இத்தகைய நபர்கள் நியமிக்கப்படுவதால் இலங்கையின் இராஜதந்திர நகர்வுகள் முடங்கிப் போகும் அபாயம் இருப்பதாகவும் வெளிவிவகாரத் துறையினரும் கொள்கை வகுப்பாளர்களும் அச்சமடைந்துள்ளனர். (து)

## அணிதிரண்டு போராடுவதை தவிர வேறுவழியில்லை போராட்டத்தில் இணைந்த மக்கள் கூற்று

(கொழும்பு)

பேச்சுவார்த்தை மூலம் தமிழ் மக்களின் உரிமை கிடைக்கப்போவதில்லை. எனவே, தேசியத் தலைவரின் வழியில் அணி திரண்டு போராடுவதன் மூலமே எமது உரிமையை வென்றெடுக்க முடியும் என திருப்பழுகாமத்தில் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் தங்களை முழுமையாக இணைத்துக் கொண்ட பொதுமக்கள் தெரிவித்தனர்.

கடந்த 13 ஆம் திகதி சனிக்கிழமை திருப்பழுகாமம் கண்டுமணி மகா வித்தியாலயத்தில் வைத்து எழுபது பேர் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் தங்களை முழுமையாக இணைத்துக் கொண்டனர்.

இந்த நிகழ்வில் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் பா.தயாமோகன், லெப்.கேணல் ராஜன், பயிற்சிக் கல்லூரி ஆசிரியர் கீதன், வெல்லாவெளி கோட்ட தளபதி யோகராஜ், பட்டிருப்பு கோட்ட அரசியல் பெறுப்பாளர் செல்வா ஆகியோர் கலந்துகொண்டனர்.

அண்மைக்காலமாக தமிழ் மக்கள் சிங்களபடைகளாலும் துணைப் படையினராலும் படுகொலை செய்யப்படும் நிலையில் நாம் விடுதலைப் போராட்டத்தில் இணைந்து போராடுவதைத் தவிர வேறு வழியில்லை.


அந்தஅடிப்படையில்தான் தாங்கள் இணைந்து கொண்டுள்ளோம்.


இதேபோன்று ஏனைய பகுதிகளிலிருந்தும் போராட்டத்துக்கு பலம் சேர்க்கும் வகையில் மக்கள் விடுதலைப் போராட்டத்தில் இணைந்து கொள்ள வேண்டும் எனவும் அவர்கள் குறிப்பிட்டனர். (து)

# கணினிக் கல்விப் பகுதி

(சென்ற வாரத் தொடர்ச்சி.....) 04

சென்ற வாரம் நாம் www.yahoo.com மூலம் இமெயில் முகவரி எவ்வாறு பெறுவது எனப்பார்த்தோம். இன்று நாம் www.mail.yahoo.com தளத்திலிருந்து எவ்வாறு யாகூவின் இலவச இமெயில் முகவரி உருவாக்குவது எனப்பார்ப்போம். இரண்டு தளமும் யாகூவினது தான்.Internet Explorer ஐ திறந்து Address Bar ல் www.mail.yahoo.com என்ற முகவரியை ரைப் செய்து Go என்பதை கிளிக் செய்யவும் அல்லது ரைப் செய்த பின்னர் கீபோர்ட்டிலுள்ள Enter கீயை அழுத்தவும். இத்தளத்தில் ஏற்கனவே இமெயில் முகவரி இருந்தால் பயனாளர் பெயர் மற்றும் யூசர் நேம் கொடுத்து உள்ளே சென்று இமெயிலை செயற்படுத்தலாம். புதிதாக ஒரு இமெயில் முகவரி உருவாக்குவ தென்றால் Don't have a yahoo ID என்பதன் கீழுள்ள Sign Up என்பதை கிளிக் செய்ததும் விண்ணப்பபடிவம் ஒன்று தோன்றும். விண்ணப்பபடிவத்தில் முதல் பெயர், கடைசிப் பெயர் மற்றும் பிறந்த திகதி, பாஸ்வேர்ட்டை ஒவ்வொரு கட்டத்திலும் கிளிக் செய்து கிளிக் செய்து ரைப் செய்து முடித்த பின் Submit ஐக் கிளிக் செய்தவுடன் இப்பொழுது உங்களுக்கு யாகூவின் இமெயில் முகவரி கிடைத்துவிடும். யூசர் நேம் மற்றும் பாஸ்வேர்ட்டை ஞாபகம் வைத்திருத்தால் மட்டுமே மெயிலை செயற்படுத்த முடியும்.





உங்களுக்கென ஒரு மின்னஞ்சல் முகவரி இருந்தால் மட்டுமே பிறரிடமிருந்து மின்னஞ்சலைப் பெற முடியும். மின்னஞ்சல் முகவரிகளை பயன்படுத்தும் போது முக்கியமான தொன்றைக் கவனிக்க வேண்டும், அதாவது இமெயில் விலாசம் பெரிய எழுத்தில் (Capital) இருந்தால் பெரிய எழுததாகவும் சிறிய எழுத்திலிருந்தால் (Small) சிறிய எழுத்தாகவும் மட்டும் பயன்படுத்த வேண்டும். Capital Letter ல் இருக்கும் முகவரியை Small Letter ஆக பயன்படுத்த முடியாது. நாம் இமெயில் விலாசத்தை எப்படி உருவாக்கினோமோ அப்படியே தான் பயன்படுத்த வேண்டும். உதாரணமாக kt.sarangan @gmail.com என்பதை KT.SARANGAN@GMAIL.COM என்றோ அல் லது Kt.Sarangan@Gmail.Com என்றோ பயன்படுத்த முடியாது.

**இமெயில் முகவரி ஒன்றை உருவாக்குவது பற்றிக் கற்றுவிட்டோம். இனி இமெயிலை பயன்படுத்துவது பற்றி அதாவது இமெயில் அனுப்புவது, பெறுவது பற்றிப் பார்ப்போம். முதலில் இமெயில் எவ்வாறு அனுப்புவது எனப்பார்ப்போம்.**




உங்களது கணினியில் இணைய இணைப்பை ஏற்படுத்தி, இணைய மையம் (Netcafe) என்றால் நேரடியாக Internet Explorer என்ற icon ஐ திறந்து வரும் விண்டோவில் அட்ரஸ் பாரில் www.mail. yahoo.com என்ற இணையத் தளமுக வரியை ரைப் செய்து எண்டர் கீயை அழுத்தவும் இப்பொழுது மெயில தளம் லோடாகி வரும். பின்னர் User Name மற்றும் Password என்ற இடத்தில உங்களது பயனாளர் பெயர் அதாவது இமெயில் முகவரியையும் பாஸ்வேர்ட்டையும் ரைப் செய்து விட்டு Sign in என்பதை கிளிக் செய்யவும்.

சிறிது நேரத்தின் பின் உங்களது இமெயில் செயற்பாட்டுக்கு வந்து விடும் இனி நீங்கள் யாருக்கு வேண்டுமானலும் இமெயில் அனுப்பலாம். உதாரணமாக உங்கள் நண்பனுக்கு இமெயில் அனுப்பவேண்டும் என்றால் Compose என்ற கட்டத்தை கிளிக் செய்யவும். உடனடியாக To, Subject என்ற விண்டோ காட்சியளிக்கும். இதிலே To என்பதில் அனுப்பவேண்டிய அதாவது நண்பனின் மின்னஞ்சல் முகவரியைரைப் செய்யவும். Subject பகுதியில நீங்கள் என்ன செய்தி அனுப்புகிறீர்கள் என்பதை சுருக்கமாக Subject பகுதியில் இடவேண்டும். பின்னர் Messa ge Box க்குள் தகவலை ரைப் செய்துவிட்டு அனுப்பு (Send) என்ற பட்டனைக கிளிக் செய்யவும் உடனடியாக இவ இமெயில் உங்கள் நண்பனுக்கு கிடைதது விடும் இப்பொழுது வெற்றிகரமாக இமெயில் அனுப்பப்பட்டுள்ளது என்ற தகவல் வெளி வரும. அனுப்பும் போது முகவரி பிழையாகயிருந்தால அந்தச் செய்தி எமக்கே திரும்பக் கிடைத்துவிடும்.




அமெரிக்காவிலுள்ளவருக்கு இமெயில் அனுப்ப செலவாகும் பணமும் அடுத்த தெருவிலுள்ள நண்பனுக்கு அனுப்பும் இமெயில் செலவும ஒன்றே. உரியவரிடம் மெயில் சென்றடையும் வினாடியும் ஒன்றே . இமெயிலுக்கு காலம், நேரம், சாதி, மொழிப் பிரச்சினை இல்லை.

*அடுத்த வாரம் வந்த இமெயிலினை திறந்து எப்படிப் பார்வையிடுவது எனப்பார்ப்போம்.*

## *GIT குறிப்புக்கள்*

***சென்ற வாரத்தொடர்ச்சி....***

*5. Information System* - தகவல் தொழினுட்ப முறையை விரிவாக விளக் கும் அலகு இதுவாகும். இதற்காக 14 பாடவேளை ஒதுக்கப்பட்டுள்ளது.

*6. IT AND National Development-* இவ்வலகானது ஒரு கணினி ஆய்வு கூடம் எவ்வாறு இருக்கும், எவ்வாறு செயற்படுகிறது, எந்த முறையில் கணினி உள்ளது போன்ற விடயங்களை விளக்கும் அலகு. அதற்காக 2 பாடவேளை ஒதுக்கப்பட்டுள்ளது.

மொத்தமாக 6 அலகுக்குமாக 72 பாடவேளை கல்விஅமைச்சினால் ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் 21 பாடவேளை கணினி செயன்முறைக்காகவும் மிகுதி 51 பாடவேளை கற்றல் செயற்பாடுகளை மேற்கொள்ளுமாறு அமைச்சு அறிவித்திருக்கிறது. இவ் GIT கல்வியானது தரம் 12 க்கு மட்டுமேயாகும். சென்ற வருடம் GIT பரீட்சை முதல் தடவையாக நடைபெற்றது. இரண்டாவது பரீட்சை இந்த வருடம் ஆகஸ்ட் மாதம் நடைபெறும் என கல்வியமைச்சு அறிவித்துள்ளது. நாம் GIT கல்வியில் கற்பிக்கப்படும் அலகுகளையும் GIT பற்றியும் பார்த்திருந்தோம். அல்லவா? இனி நாம் எப்படிப்பட்ட வினாக்கள் வரும் என வரும் வாரங்களில் பார்ப்போம்.

GIT கல்வியானது உயர்தர மாணவர்களுக்கு கட்டாய பாடமாகும். தற்போது ICT - Information Communication & Technology எனும் கல்வியை க.பொ.த (சா/த) தர மாணவர்களுக்கு விருப்பத்திற்குரிய தொழினுட்பப் பாடமாக கல்வி அமைச்சு இந்த வருடம் அறிமுகப படுத்தியமை குறிப்பிடத்தக்கது.

## பாஸ்வேர்ட்


கணினிக் கல்வி



கே.ரி.சாரங்கன்
Email: kt.sarangan@gmail.com

இணையத்தில் பாஸ்வேர்ட் ஆனது மிகமுக்கிய இடத்தை வகிக்கிறது. பாஸ்வேர்ட் என்பது இமெயில் முகவரி உரிமையாளருக்கு அல்லது இணையத்தள உரிமையாளருக்கு மட்டுமே தெரிந்த வேறு யாருக்கும் தெரியாத இரகசிய வார்த்தையே பாஸ்வேர்ட் எனப்படும். அதாவது வேறு நபர்களிட மிருந்து எமது இமெயிலையோ அல்லது இணையத்தளத்தையோ பாதுகாத்துக் கொள்ளவே பாஸ்வேர்ட் (கடவுச்சொல்) பயன்படுகிறது. பாஸ்வேர்ட் தெரிந்திருந்தால் மட்டுமே இமெயிலையோ அல்லது இணையத் தளத்தையோ கட்டுப்படுத்தலாம். ஆகவே இலகுவில் கண்டுபிடிக்க முடியாத வார்த்தைகளை பாஸ்வேர்ட்டாக பயன்படுத்துங்கள். பாஸ்வேர்ட்டை உங்களது பிறந்த திகதி, தொலைபேசி எண் மற்றும் அகராதியில் இல்லாத சொல்லை பாஸ்வேர்ட்டாக பயன்படுத்துங்கள். சொந்த விடயங்களை பயன்படுத்தாதீர்கள். பாஸ்வேர்ட்டை தமிழில் கடவுச்சொல் எனக் கூறுவார்கள். இது பொதுவாக ஆறு எழுத்துக்களாக இருக்கவேண்டும். பாஸ்வேர்ட்டானது கணினியிலும் சரி, தொலைபேசியிலும் சரி, இணையத்தளங்களிலும் பெரிதும் பயன்படுத்தப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

**இதுவே மெயில் தளமாகும். அதாவது நமது யூசர் நேம் மற்றும் பாஸவேர்ட கொடுத்து Sign in ஐக் கிளிக் செய்ததும தோனறும்விண்டோ வாகும இதிலுள்ள Inbox பகுதியை கிளிக் செயவதன் மூலம் நமக்கு வந்துள்ள மெயில்களைப் பார்வையிடலாம் அல்லதுCompo se பகுதியை கிள'க்செய்து இமெயில் அனுப்பிக் கொளளலாம.**




**(மிகுதி அடுத்த வாரம் தொடரும்...)**

### கேள்வி - பதில் பகுதி

கேள்வி : கணினியின் இயக்கமுறை (Operating System) பற்றி விளக்க முடியுமா?

எம்.ஜெயந்திரன்
கொக்குவில்

பதில் : கணினி இயக்குவதற்கு மிகவும் முக்கியமானது ஒப்பரேட்டிங் சிஸ்டம். இது இன்றி கணினி இயங்காது. இன்று உலகிலுள்ள பெரும்பாலான கணினிகளில் பயன்படுத்தப்படும் ஒப்பரேட்டிங் சிஸ்டமாக விளங்குவது தான் விண்டோஸ் (Windows) ஒப்பரேட்டிங் சிஸ்டம். மைக்ரோ செப்ட் (Microsoft) நிறுவனத்தினால் வெளியிடப்படும் சிஸ்டத்தை 90 % வீதமானோர் பயன்படுத்துவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றது. விண்டோஸின் பல வெளியிடுகள் வெளிவந்தாலும் கடைசியாக வந்த Windows XP பலராலும் விரும்பிப் பயன்படுத்துகிறார்கள். இதற்குக் காரணம் எக்ஸ் பீயிலுள்ள இலகுவான வேலைகள் மற்றும் இதன் காட்சித் தெளிவே இதற் குக் காரணம. எக்ஸ்பீக்கு முந்திய பதிப்புக்களான மைக்ரோ சொப்ட்ன் ஒப்பரேட்டிங் சிஸ்டமாக MS DOS , MS Windows 95, Windows 98, Windows ME ஆகியவையே வெளிவந்தமை குறிப்பிடத்தக்கது.

***உங்கள் கேள்விகளையும் ஆக்கங்களையும் இமெயில் மூலம் அனுப்பி வைக்கலாம். தரமானவையாகயிருப்பின் பிரசுரிக்கப்படும்.***

***இமெயில் முகவரி : kt_sarangan@yahoo.com***

மனிதனிடம் அறிவு உறங்கினால் மிருக இச்சைகள் கண்விழித்தெழுந்து குதியாட்டம் போடுகின்றன.

-பிளேட்டோ

வலம்புரி

# பேரினவாதத்தை சர்வதேசம் எச்சரிக்க வேண்டும்

இலங்கையின் இன விவகாரத்தில் சர்வதேசத்தின் பார்வை அண்மைக்காலமாக வலுப்பெற்றுள்ளது. தமிழ் மக்களின் விடுதலைப்போராட்டத்தின் உச்சம் காரணமாக இலங்கையின் இன விவகாரத்தில் அக்கறைகொள்ளவேண்டிய சூழ்நிலை சர்வதேச சமூகத்திற்கு தவிர்க்கமுடியாததாகிவிட்டது.

சர்வதேசத்தின் தலையீடு காரணமாக அரசும் விடுதலைப்புலிகளும் இணங்கிக்கொள்ளக்கூடியதான யுத்த நிறுத்த உடன்பாடு சாத்தியமாயிற்று.

இருந்தும் இந்த உண்மையை ஏற்றுக்கொள்வதில் ஜே.வி.பி., ஹெல உறுமய போன்ற இனவாதக் கட்சிகள் வேண்டுமென்றே பின்னடிக்கின்றமை துரதிஷ்ட வசமானதாகும்.

சர்வதேச நாடுகளிடம் பெருந்தொகையான நிதி உதவிகளைப் பெற்றுவந்த இலங்கை அவ்வுதவிகளை நாட்டின் அபிவிருத்தி பணிக்கு செலவிட்டிருக்குமேயானால் தற்போது நாட்டில் தலை விரித்தாடும் வறுமை இன்மையும் இல்லாது போயிருக்கும்.

இதனை விடுத்து தமிழ் இனத்தை அழித்தொழித்துவிட்டு பின்னர் அபிவிருத்தி பற்றி பார்க்கலாம் என்ற சிந்தனையே சிங்கள ஆட்சியாளர்களிடம் இருந்தது.

ஆயினும் தமிழ் மக்கள் தமது இருப்பை உறுதி செய்து கொள்வதற்காக ஆயுதப் போராட்டத்தை ஆரம்பித்தனர்.

தமது இருப்புக்காக ஆயுதம் ஏந்திப் போராடிய எந்த இனத்துவமும் அதில் தோல்வி அடைந்ததாக வரலாறு இல்லை.

இந்த உண்மையை சிங்களமும்,பௌத்தமும் தான் உலகம் என்ற நினைப்பில் இருந்த சிங்கள ஆட்சியாளர்களால் உணர்ந்து கொள்ளமுடியாமல் போனது.

ஆயுதப்போராட்டத்தை அகிம்சை வழியில் வெல்வதற்குப் பதிலாக தமிழ் மக்களை கொன்றொழிக்க வேண்டும். அதில் குறிப்பாக தமிழ் இளைஞர்களை அழிப்பதன் ஊடாக தமிழினத்தின் வம்சத்தையே இல்லாது செய்து விடமுடியுமென சிங்கள ஆட்சியாளர்கள் திட்டம் தீட்டியுள்ளனர்.

ஜனநாயக ஆட்சியில் தெரிவுசெய்யப்பட்டவர்களிடம் இத்தகையதொரு திட்டம் இருக்குமாயின் ஜே.வி.பி. ,ஹெல உறுமய மற்றும் பௌத்த பிக்குகள் எத்தகைய நிலைப்பாடுகள் இருந்திருக்கும் என்பதை ஊகித்துக்கொள்ளமுடியும்.

இலங்கை ஆட்சியாளர்கள் தமிழ் மக்களை பாதுகாக்கத்தவறியதுடன் தனது கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் படையினர் மூலம் ஆயிரக்கணக்கான அப்பாவித் தமிழ் இளைஞர்களை கொலைசெய்தது.

இந்த மோசமான நிலை தமிழர் தாயகம் எங்கும் வியாபித்துக் கொள்ள அதன் மறுபுறமாக தமிழ் மக்களின் விடுதலைப்போராட்டமும் உச்சமடைந்தது.


சிங்கள பேரினவாத அரசுகள் தமிழ் மக்களை கொன்றொழித்து அவர்களின் உரிமைகளையும் உடைமைகளையும் கபளீகரம் செய்தபோது ஏன் எதற்கு எனக்கேள்வி எழுப்பாமல் சர்வதேச நாடுகள் மௌனம் சாதித்தன.

தாம் வழங்கிய நிதியுதவியைக்கூட தமிழ் மக்களின் அழிப்பிற்கு இலங்கை அரசு பயன்படுத்துகின்றதென்ற உண்மையைத் தெரிந்திருந்தும் உலகநாடுகள் மௌனம் சாதித்தமை அந் நாடுகளின் நடுநிலையற்ற வெளிப்பாடாகவே இருந்தது.

அவர்களின் அக்கறை அர்த்தமுள்ளதாக இருக்க வேண்டுமாயின் முதலில் பேரினவாதிகளை எச்சரிக்கை செய்வது கட்டாயமானதாகும்.

# ஒழுக்க சீலமுடைய சமுதாயத்தை உருவாக்குவதில் ஜனாதிபதி உறுதி

(கொழும்பு)



தார்மீக விழுமியம் கொண்ட சமுதாயம் ஒன்றைக் கட்டியெழுப்புவதற்கு அர்ப்பணிப்போடு செயற்படவிருப்பதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வலிறுயுத்தியுள்ளார்.

மஹிந்த சிந்தனையில் குறிப்பிடப்பட்டுள்ளதற்கு அமைய நற்குணமுடைய பிரஜைகளை உருவாக்கி அதன் ஊடாக ஒழுக்க சீலமுடைய சமுதாயம் ஒன்றை உருவாக்குவதற்கான தருணம் எற்பட்டுள்ளதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

நாடு முழுவதிலுமுள்ள பௌத்த அமைப்புக்கள் ஒன்றிணைந்து தயாரித்த ஒழுக்க சீலமுடைய சமுதாயமொன்றைக் கட்டியெழுப்புவதற்கான ஆலோசனைக் கோவையொன்றை நேற்று முன்தினம் அலரி மாளிகையில் ஜனாதிபதியிடம் கையளித்த போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்த ஆலோசனைக் கோவையில் மதுவுக்கு அடிமைப்படும் நாட்டு மக்களைப் பாதுகாத்தல், சமயங்களில் கோட்பாடுகளைப் பேணுதல், மதமாற்றத்தைத் தடுத்தல், மிருகவதையை தடுத்தல் போன்ற பல முக்கிய விடயங்கள் அடங்கியுள்ளன.

மதுபானத்தை இல்லாது ஒழிப்பதற்கு நாட்டின் தலைவர் என்ற வகையில் ஜனாதிபதியின் நேரடியான தலையீட்டை இந் நிகழ்வில் கலந்து கொண்ட பொதுமக்கள் மற்றும் பௌத்த பிக்குகள் பாராட்டினர்.

நாட்டின் கலாசாரம் சீர்குலைந்து வரும் இத் தருணத்தில் நாட்டு மக்களை நல்வழியில் இட்டுச் செல்வதற்கு ஜனாதிபதியின் தலைமைத்துவம் பெரிதும் உதவுவதாக அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

(து-9)

# தீவக சம்பவங்கள் குறித்து தீவிர விசாரணை

(கொழும்பு)

யாழ். தீவகப் பகுதியில் கடந்த சனிக்கிழமை இரவு இடம்பெற்ற மூன்று வெவ்வேறு மனிதப் படுகொலைகள் தொடர்பாக தீவிர விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கொலைச் சம்பவங்களுடன் தொடர்புடைய சந்தேக நபர்களை கைதுசெய்யும் பொருட்டு பிரதேசத்திற்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபரின் பணிப்புரையின்படி விசேட பொலிஸ் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

அல்லைப்பிட்டி, புளியங்கூடல், வேலணை ஆகிய பிரதேசங்களில் இடம்பெற்ற துப்பாக்கி சூட்டுச்சம்பவங்கள் தொடர்பாக அரச பகுப்பாய்வுத் திணைக்களத்திடமிருந்து அறிக்கை ஒன்றை பெறவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மனித படுகொலைகள் தொடர்பாக ஆரம்பகட்ட விசாரணைகள் பொலிஸாரினால் நடத்தப்பட்ட பின்னர் மேலதிக விசாரணைகளை நடத்துமாறு குற்றப்புலனாய்வுத் திணைக்களம் கோரப்படுமென்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்தச் சம்பவங்கள் தொடர்பாக இதுவரை பல விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் விசாரணைகளை பக்கசார்பற்று நடத்துமாறும் சம்பந்தப்பட்ட பிரிவினருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸ்மா அதிபர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தீவகப் பகுதியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. பொலிஸாரின் உதவியுடன் கடற்படையினர் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டுள்ளனர்.

(து-9)

# தீர்க்கமான நடவடிக்கை தேவை ஜாதிக ஹெலஉறுமய வற்புறுத்தல்

(கொழும்பு)

பயங்கரவாதம் தொடர்பாக அரசாங்கம் தீர்க்கமான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென ஜாதிக ஹெல உறுமய கோரியுள்ளது.

இல்லையெனில் இலட்சக்கணக்கான மக்கள் அநாதைகளாக நேரிடும் என்றும் ஜாதிக ஹெல உறுமயவின் பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்தினதேரர் தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளால் வடக்கு -கிழக்கிலுள்ள மக்களுக்கும் பௌத்த தேரர்களுக்கும் உயிர் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (து-9)

# வடபகுதி மக்களின் ஆதரவைப்பெற அமைச்சர் டியூ ஆலோசனை

(கொழும்பு)

தென்பகுதியிலுள்ள முக்கிய அரசியல் கட்சிகள் பொதுவான நிலைப்பாட்டை கடைப்பிடிப்பதன் மூலமே தேசிய பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியுமென்று அமைச்சர் டியூ குணசேகர தெரிவித்துள்ளார்.

தேசிய பிரச்சினைக்கு பேச்சுவார்த்தைகளின் அடிப்படையில் தீர்வுகாணும் அரசாங்கத்தின் முயற்சிக்கு சகல கட்சிகளும் பூரண ஆதரவை வழங்க வேண்டுமென்று அவர் கேட்டுக்கொண்டார்.

வட பகுதி மக்களின் பூரண ஆதரவை அரசாங்கம் பெற்றுக்கொள்ளவேண்டுமானால் இந்தப் பிராந்தியத்தில் அபிவிருத்தி நடவடிக்கைகளை அரசாங்கம் தீவிரமாக மேற்கொள்ளவேண்டுமென்றும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (து-9)

# சொல்லாலும் செயலாலும் நிர்ப்பந்தம் வாசுதேவ நாணயக்கார குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவாக செயற்பட்ட அரசியல் கட்சிகள் மற்றும் இயக்கங்கள் யுத்தத்தை ஆரம்பிக்குமாறு வலியுறுத்துவதாக ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பின் கொழும்பு மாநகர மேஜர் வேட்பாளர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

அவர்கள் வெறும் சொல்லில் மட்டுமல்லாது செயலிலும் நெருக்கடிகொடுப்பதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற வைபவம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.,

மஹிந்த ராஜபக்ஷவை ஜனாதிபதி பதவியில் அமர்த்தப் பிரயத்தனம் செய்த கட்சிகள் பல இன்று யுத்தத்தை நடத்த வேண்டுமென்று அவரை வலியுறுத்துகின்றனர்.

யுத்தத்தை விரும்பாத நூற்றுக்கு 70 வீதமான மக்கள் நடந்து முடிந்த உள்ளூராட்சி தேர்தலில் ஜனாதிபதிக்கு ஆதரவு வழங்கியிருந்ததையும் சுட்டிக்காட்டினார்.

எனினும் யுத்தம் ஒன்றை ஆரம்பிக்க வேண்டும் என்று சிலர் சொல்லாலும் செயலாலும் நிர்ப்பந்திக்கின்றார்கள் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (து-9)

# க.பொ.த.(உ/த)பரீட்சையை நடாத்துவதற்கு சகல ஏற்பாடுகளும் பூர்த்தி

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் க.பொ.த. உயர்தரப் பரீட்சையை எந்தத் தடையுமின்றி நடத்துவதற்கு தேவையான சகல ஏற்பாடுகளையும் மேற்கொண்டிருப்பதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அனுர எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.


இது தொடர்பாக பாதுகப்பு அமைச்சு அதிகாரிகளுடன் கடந்த செவ்வாய்க்கிழமை பேச்சுவார்த்தையொன்றை நடத்தியதாக அவர் தெரிவித்தார்.

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் 230 பரீட்சை நிலையங்கள் அமைக்கப்படவுள்ளது. இந்த நிலையங்கள் அமைந்திருக்கும் பகுதிகளில் விசேட பாதுகாப்பு நடவடிக்கைகளை முப்படைகளினதும் பொலிஸாரினதும் உதவியுடன் நடைமுறைப்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

பரீட்சையின் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளுக்கென போக்குவரத்து வசதிகளைப் பெற்றுக்கொடுப்பதற்கும் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதேவேளை, க.பொ.த. உயர்தர பரீட்சையின் அனுமதிப் பத்திரங்கள் ஏற்கனவே தபால் மூலம் அனுப்பப்பட்டுள்ளதாக ஆணையாளர் மேலும் தெரிவித்துள்ளார். (து-9)

## தினசரி தியானம் விவேகச் சிந்தனைகள்



உயர்ந்த இலட்சியம் ஒன்றை உறுதியாகப் பற்றிக்கொண்டு உன் வாழ்வை அதற்காகவே விட்டுவிடு. இறப்பது உறுதி. ஒரு பெரிய நோக்கத்திற்காக உயிரைத் துறப்பது மிகமிக உயர்ந்தது.

சுவாமி விவேகானந்தர்





புத்தூர் நிலாவரைப் பகுதியில் நேற்று முன்தினமிரவு காணாமல் போனதாக கூறப்படும் வர்த்தகரின் வர்த்தக நிலையத்தையும் அதனுள் காணப்படும் இரத்தக்கறையையும் சோகத்தில் காணப்படும் உறவினர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்-சதீஸ்)

# குமுதினிப் படுகொலை நினைவுநாள் நெடுந்தீவில் நேற்று அனுஷ்டிப்பு

(நெடுந்தீவு)

1985 ஆம் ஆண்டு நெடுந்தீவுக் கடற்பரப்பில் வைத்து கடற்படையினரால் வெட்டி படுகொலை செய்யப்பட்ட 36 பேரின் 21 வது ஆண்டு நிறைவு தினம் நெடுந்தீவு மாவலித் துறைமுகத்தில் அமைந்துள்ள குமுதினிப் படுகொலை மண்டபத்தில் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

நேற்றுக் காலை 7 மணிக்கு நெடுந்தீவு பங்குத்தந்தை ஜீ.எஸ்.அருள்நேசன் அடிகளாரால் நினைவுத் திருப்பலி இடம்பெற்று குமுதினிப்படுகொலை நினைவுத்தூபிக்கு மலர்மாலை அணிவித்து மலரஞ்சலியும் செலுத்தப்பட்டது.

அதனைத் தொடர்ந்து படுகொலை செய்யப்பட்டவர்களின் பெற்றோர் உறவினர்களால் நினைவுச் சுடர் ஏற்றப்பட்டது.

இதேவேளை காலை 8மணிக்கு நெடுந்தீவு நெழுவினிப்பிள்ளையார் ஆலயத்திலும் காலை 9 மணிக்கு நெடுந்தீவு தென்னிந்திய திருச்சபையிலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனைகள் உணர்வு பூர்வமாக இடம்பெற்றன. (ச-05)

# குழந்தைகள் கொல்லப்பட்டமை குறித்து யுனிசெப்பின் நடவடிக்கைதான் என்ன?

## பத்மினி சிதம்பரநாதன் எம்.பி. கேள்வி

(யாழ்ப்பாணம்)

அல்லைப்பிட்டியில் 4மாதக்குழந்தை படுகொலை செய்யப்பட்ட பின்னரும் கூட ஐ.நாவின் சிறார் அமைப்புகள் வாய்மூடிக் கிடப்பது குறித்து தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் பத்மினி சிதம்பரநாதன் கவலை தெரிவித்துள்ளார்.

வடக்கு கிழக்கில் மட்டும் கடந்த மூன்று நாட்களில் மொத்தம் 37 தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

ஜெனீவாப் பேச்சுக்குப் பின்னர் 180 தமிழர்களை இராணுவத்தினரும் இவர்களுடன் சேர்ந்தியங்கும் துணை இராணுவக் குழுக்களும் படுகொலை செய்துள்ளனர்.

யாழ்.தீவகம் அல்லைப்பிட்டியில் கடந்த வெள்ளிக்கிழமை 4மாதக்குழந்தையும் 4 வயதுச் சிறுவனும் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

சம்பூர் மற்றும் மூதூர் கிழக்கில் ஏப்ரல் 25 மற்றும் 26 திகதிகளில் விமானப்படை நடத்திய தாக்குதலில் 16 வயதுக்கும் குறைந்த 8 சிறார்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.16 வயதுக்கு குறைந்த இரு சிறார்கள் அண்மையில் மட்டக்களப்பிலும் யாழ்ப்பாணத்திலும் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த பல வாரங்களாக தொடர்ச்சியாக சிறார்களும் குழந்தைகளும் படுகொலை செய்யப்படுவது குறித்து யுனிசெவ் மற்றும் யு.என்.எச்.சி.ஆர் போன்ற ஐ.நாவின் சிறார் அமைப்புக்கள் கடும் கண்டனம் தெரிவிக்க வேண்டும்.

சிறார் படை சேர்ப்புக்குறித்து தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு இந்த அமைப்புக்களும் சர்வதேச அமைப்புக்களும் வழமைக்கு மாறாக குரல் எழுப்புகின்ற போது தமிழ் சிறார்களையும் குழந்தைகளையும் அரசாங்கம் படுகொலை செய்கிறபோது அமைதியாக இருக்கின்றன என அவர் குற்றஞ் சாட்டினார். (ச-05)

# கிளிநொச்சியில் கண்டனப்பேரணி

(கிளிநொச்சி)

தமிழ்மக்கள் மீது மேற்கொள்ளப்பட்டு வரும் இன அழிப்பு நடவடிக்கையினைக் கண்டித்து கிளிநொச்சியில் இன்று மாபெரும் கண்டனப்பேரணி நடத்தப்படவுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் இதற்கான ஏற்பாட்டைச் செய்துள்ளது.

கிளிநொச்சி பொது விளையாட்டு மைதானத்தில் காலை 10 மணிக்கு ஆரம்பமாகும் பேரணி ஐக்கிய நாடுகள் சபை கிளிநொச்சி செயலகத்தினை சென்றடையும்.

'சர்வதேச சமூகம் மௌனம் காப்பது ஏன்' என்ற தொனிப்பொருளில் நடைபெறும் இந்த பேரணியின் நிறைவில் மனுக்கள் கையளிப்பு நிகழ்வும் நடைபெறவுள்ளது.

பேரணியில் கிளிநொச்சி மாவட்டத்தின் அரச,அரசசார்பற்ற நிறுவனங்களின் பணியாளர்கள், பொதுமக்கள் என பெருமளவானோர் என கலந்து கொண்டு தமது ஒருமித்த குரலினை வெளிப்படுத்துவர் என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ச-05)

# ஆயுதக்குழு தாக்கி...

தாம் ஒருவரை தேடிவந் ததாகவும் அவரைக் காட்டுமாறும் அச்சுறுத்தி வீட்டில் இருந்த அனைவரையும் கடுமை யாகத் தாக்கியுள்ளனர்.

அவர்களில் சிலர் சரளமாக தமிழில் உரையாடியதாகவும் குடும்பத்தினர் தெரிவித்தனர். பின்னர் தாம் தேடி வந்தவர் இல்லை என்று கூறிய ஆயு தக் குழுவினர் வீட்டின் தளபாடங்க ளையும் ஜன்னல் கண்ணாடிகளையும் சேதப் படுத்தியதுடன் தாம் மீண்டும் வருவோம் என்றும் வரும்வரை வீட்டுக்கதவையும் படலையும் திறந்தே வைத்திருக்க வேண்டு மென்றும் அச்சுறுத்திச் சென்றுள்ளனர்.

கந்தையா செயகுமாரலிங்கம் (வயது 59) சாவகச்சேரி பலநோக்கு கூட்டுறவுச் சங்க பணியாளரான செ.தெய்வநாயகி (வயது 58) செ.ரட்ணலொகினி (வயது 33) யாழ். அரச செயல ஊழியரான செ.உமாதேவி (வயது 31) வலயக்கல்வி அலுவகப் பணியாளரான செ.செல்லவதி (வயது 28) மருதனார் மடம் நுண் கலைக்கல்லூரி 3ம் வருட மாணவியான விஜயகலா (வயது 28) ஆகியோரே காயமடைந்து யாழ்.போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ச-5)

# இணைத் தலைமையில் இணைய இந்திய அரசாங்கம் மறுப்பு

(டில்லி)

இலங்கைக்கு உதவி வழங்கும் இணைத் தலைமை நாடுகள் குழுவில் இணைவதை இந்திய கூட்டு அரசாங்கம் விரும்பவில்லை என்று இந்திய ஆங்கில நாள் ஏடு ஒன்று தெரிவித்துள்ளது.

இலங்கைக்கான டோக்கியோ உதவி வழங்கும் நாடுகளின் இணைத்தலைமை நாடுகள் குழுவில் இந்தியா இணைய விரும்பவில்லை என்றும் இலங்கை அமைதி முயற்சிகளில் தீவிர முனைப்பு காட்டவும் விரும்பவில்லை என்றும் புதுடில்லியில் உள்ள அரசாங்கத்தின் உயர் நிலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

யப்பானின் சிறப்புத்தூதுவர் யசூசி அகாசி இணைத் தலைமைநாடுகள் குழுவில் இந்தியா இணையவேண்டுமென்று கேட்டுக் கொண்டதாக வெளியான செய்திகளையும் அவர்கள் மறுத்துள்ளனர்.

இணைத் தலைமைநாடுகளுக்கு சாத்தியமான எந்தவகையில் உதவமுடியுமோ அந்த வகையில் உதவ வேண்டுமென்றுதான் இந்தியாவை யசூசி அகாசி கேட்டுக் கொண்டார் என்றும் அவர்கள் கூறினர் என்றும் அச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-05)

# வவுனியாவில் கிளைமோர்

(வவுனியா)

வவுனியாவில் விடுதலைப்புலிகளின் பகுதிக்குள் இராணுவத்தினரின் ஆழ ஊடுருவும் படையணியினர் நடத்திய கிளைமோர்த் தாக்குதலில் இரு இளைஞர்கள் படுகாயமடைந்துள்ளனர்.

வவுனியா சேமமடுப்பகுதியில் நேற்று காலை 9.30 மணியளவில் இச் சம்பவம் நடந்தது. உழவு இயந்திரத்தில் சென்று கொண்டிருந்த இளைஞர்களை இலக்கு வைத்து இத்தாக்குதல் நடத்தப்பட்டதாக தமிழீழ காவல்துறையினர் தெரிவித்துள்ளனர்.

இத்தாக்குதலில் பஞ்சலிங்கம் தயாபரன் மற்றும் கந்தசாமி சறா ஆகிய இருவருமே காயமடைந்தவர்கள் என்றும் கந்தசாமி சறா மிகவும் ஆபத்தான நிலையில் இருப்பதாகவும் தமிழீழ காவல்துறையினர் கூறியுள்ளனர். (ச-05)

# யாழில் பரவலாக...

சேதமும் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

நேற்று மாலை 5மணிக்கும் 7மணிக்கு மிடைப்பட்ட நேரப்பகுதியில் பரவலாக குண்டுச் சத்தங்களும் துப்பாக்கிச்சூட்டுச் சத்தங்களும் கேட்டவண்ணம் உள்ளன. எனினும் அது குறித்து எவ்வித தகவலும் கிடைக்கவில்லை. (ச-05,15,136)

# நேரடிப் பேச்சுக்குறித்து...

இரண்டு நாள் விஜயம் மேற்கொண்டு இலங்கை வந்துள்ள அவர்; ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் அரசியல் கட்சித் தலைவர்களை சந்தித்து பேசவுள்ளதாக இலங்கைக்கான அமெரிக்கத் தூதரகம் தெரிவித்துள்ளது.

இலங்கையின் தற்போதைய நிலைவரம் குறித்தே இவரின் விஜயத்தின் போது முழுமையாக ஆராயப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

ஜெனீவா இரண்டாம் கட்டப்பேச்சுவார்த்தைகளுக்கான புறச்சூழலை உருவாக்குவது குறித்தும் இந்த விஜயத்தின்போது கவனம் செலுத்தப்படவுள்ளதுடன் டோக்கியோ இணைத்தலைமை நாடுகளின் அமெரிக்க பிரதிநிதி என்ற வகையிலேயேஇவரின் இந்த விஜயம் அமைந்துள்ளதாக அமெரிக்க தூதரகத்தினால் தெரிவிக்கப்பட்டது. (ச-05)

# இளைஞன் சுட்டுக்கொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு போதனாவைத்தியசாலைக்குள் நேற்று மாலை 5மணியளவில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் இளைஞர் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.

மற்றொரு இளைஞர் காயமடைந்துள்ளார். கொல்லப்பட்டவர் புதுநகரைச் சேர்ந்த கீதபொன்கலன் செல்வகுமார் (வயது 20) என்றும் காயமடைந்தவர் சுரேஷ்குமார் என்றும் இவர்கள் இருவரும் கருணா அணியைச் சேர்ந்தவர்கள் என்றும் விசாரணைகளை மேற்கொண்டுவரும் மட்டக்களப்பு பொலிஸார் தெரிவித்தனர்.

கொல்லப்பட்டவர் சிகிச்சைக்காக ஏற்கனவே அனுமதிக்கப்பட்டிருந்த சுரேஷ்குமார் என்பவருக்கு உதவிக்காக நின்றவர் என பொலிஸ் தரப்புத் தகவல்களின் மூலம் தெரிகின்றன.

வைத்தியசாலைக்குள் நோயாளர்களை பார்வையிடும் நேரத்தில் நோயாளர்களைப் பார்வையிடுவது போல் வந்த அடையாளம் தெரியாத இளைஞர் ஒருவரினால் இந்த துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. (ச-05)





04.05.2006 முதல்
10.30,2.30,6.30,9.30
மாமனிதக் குரங்கொன்றின் நெஞ்சை உருக்கும் கதை கொண்ட சாகசச் சித்திரம்
பீட்டர் ஜக்ஷன்
கிங்கொங்
(KING KONG)
தங்கத்தமிழ் மொழியில். பாடசாலை மாணவர்களுக்கு விசேட சலுகை


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில 16.05.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.